
விலை ரூபா: 8.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பதினான்கு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 தை 11 திங்கட்கிழமை (24.01.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 36








நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு வருகைதந்த நோர்வே நாட்டின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் ஹில்ட் ஜே.ஜோண்சன், வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் ஆகியோர் உட்பட நோர்வே உயர்மட்டக்குழுவினர் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பிரதேசங்களைப் பார்வையிடுவதைப் படங்களில் காணலாம்.

# ஸ்ரீ.சு.க - ஜே.வி.பி தொடர்பு அவுட்

## நோர்வேக் குழு இன்று புறப்படுகிறது

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளைப் பார்வையிடவும், புனர்வாழ்வு, புனர்நிர்மாண வேலைத்திட்டங்களுக்கு தேவையான நடவடிக்கைகளை மதிப்பீடு செய்யவும் வருகைதந்திருந்த நோர்வே உயர்மட்டக் குழுவினர் இன்று நாடு திரும்புகின்றனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஒப்பந்தத்தை மதித்து நடக்கும்வரை இந்நிலைமை தொடருமென்கிறது ஜே.வி.பி

(நமது நிருபர்)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி தம்முடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தைச் சற்றும் மதிக்காமல் சர்வாதிகாரப் போக்குடன் செயற்பட்டுவருவதனால் அதனுடன் எந்தவித தொடர்புகளையோ, பேச்சுவார்த்தைகளையோ வைத்துக்கொள்வதில்லையென ஜே.வி.பியின் அரசியல் உயர்பீடம் நேற்று அவசரமாகக்கூடி தீர்மானித்திருக்கிறது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## ஜன.26 தமிழீழ தேசிய துக்கதினம் விடுதலைப் புலிகளால் பிரகடனம்

(கிளிநொச்சி)

ஜனவரி 26 ஆம் திகதியை தமிழீழத் தேசிய துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையின் விபரம் வருமாறு,

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்ற போரினால் மிகுந்த துன்பங்களையும், அழிவுகளையும் சொல்லொணா இடர்களையும் சந்தித்த எமது மக்கள் வாழ்க்கையின் அனுகூலங்கள் அனைத்தையும் இழந்தனர்.

தற்போது நிலவிவரும் போர்நிறுத்த காலத்தில் எமது மக்கள் கடற்கரை ஓரங்களில் குடியேறி தமது வாழ்வாதாரத்திற்கான கடற்தொழிலை மேற்கொண்டு வாழ்வியல் அனுகூலங்களை ஓரளவு உள்வாங்கத் தொடங்கினர்.

இந்நிலையில் கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி அன்று சற்றும் எதிர்பாராதவிதமாக பொங்கி எழுந்த நிலஅதிர்வுப் பேரலைகள் இலங்கைத்தீவு உட்பட தென்னாசியப் பிராந்தியத்தின் கடலோரப்பகுதிகளை தாக்கி பேரழிவுகளை ஏற்படுத்தியுள்ளன.

இலங்கைத்தீவில் எமது தாயகப் பகுதிகளில் வாழும் எமது மக்கள் அதிகமான

(14 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேக்குழுவுடன் கூட்டமைப்பு சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் நோர்வேக் குழுவுக்குமான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இச்சந்திப்பு நோர்வேக்கான இலங்கைத் தூதரகத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது சுனாமி அனர்த்தத்தின் ஏற்பட்ட அரசியல் நிலை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் சுனாமி அனர்த்த நிவாரணப்பணிகள் என்பன தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமி அனர்த்த நிதியுதவிகள் கடற்படைக்கும் சேர்த்துத்தான்

### எனவே அதில் பீரங்கிப்படகு வாங்கவேண்டும் என்கிறார் கடற்படைத்தளபதி

(கொழும்பு)

சுனாமி அனர்த்த புனரமைப்புக்கென சர்வதேச நாடுகளினால் வழங்கப்படும் நிதியின் ஒருபகுதியைக்கொண்டு கடற்படைக் கலங்களை கொள்வனவு செய்யவேண்டுமென கடற்படைத் தளபதி தயா சந்தகிரி பாதுகாப்பு அமைச்சைக் கேட்டுள்ளார்.

சுனாமிப் பேரலையால் கடற்படைக்கு இழப்புகள் ஏற்பட்டுள்ளன. அந்த இழப்புக்களுக்கான நிவாரண உதவிகள் சர்வதேச சமூகத்தால் வழங்கப்பட்டுவருகின்றது. அவற்றைக்கொண்டு பாதிக்கப்பட்ட கடற்படைக்கலங்களுக்குப் பதிலாக புதிய கடற்படைக் கடற்கலங்களை கொள்வனவு செய்துதருமாறு அவர் பாதுகாப்பு அமைச்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமியில் இருந்து மீண்டெழுவது உலக நாடுகளுக்குப் பெரும் சவால்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மீளக்கட்டியெழுப்புவது என்பது அந்தந்த நாடுகளின் அதிகாரிகளினதும், சர்வதேச நாடுகளினதும் அடுத்தகட்ட சவாலென நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி விவகாரங்களுக்கான அமைச்சர் ஹில்ட் ஜோண்சன் தெரிவித்துள்ளார்.

புனரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்போது அவை பாதிக்கப்பட்ட மக்களை நோக்காகக்கொண்டு செய்யப்படவேண்டும்.

முல்லைத்தீவு மற்றும் அம்பாறை ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் தமது அன்றாட வாழ்வைக் கட்டியெழுப்ப பெரும் முயற்சி செய்துவருகின்றனர். அடுத்து நிகழ்பவை குறித்து அவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

பொறுமையிழந்து காணப்படும் மக்களுக்கு அரச அதிகாரிகளும், சர்வதேச நிறுவனங்களும் சகிப்புத் தன்மையுடன் தொண்டாற்றவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (ச)

# அடுத்த ஆண்டு முதல் பாடசாலைகளுக்கு
# மாணவர்களை அனுமதிப்பதில் புதிய நடைமுறை கடைப்பிடிப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டிலிருந்து பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில் புதிய நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி பிரதேச செயலர் பிரிவு மட்டத்தில் சகல தரப்பினரும் அடங்கிய சுயேட்சைக்குழு மூலம் மாணவர்கள் பாடசாலைக்கு அனுமதிக்கப்படவுள்ளனர்.

தேசிய பாடசாலைகள் எதிர்நோக்கும் நடைமுறைப் பிரச்சினைகள் குறித்து நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இககூட்டத்தில் நாட்டில் உள்ள பிரபல 50 தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் கலந்து கொண்டனர்.

தேசிய பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து இக்கூட்டத்தில் பாடசாலை அதிபர்கள் ஜனாதிபதிக்கு விளக்கி கூறினார்கள்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி,

இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண விசேட மேன் முறையீட்டு ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றார்.

இந்த மாத முடிவுக்குள் பாடசாலை ஒன்றுக்கு அனுமதி பெற்றுக் கொள்ளாத பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் அனுமதிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளுக்குப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதற்காக சில பெற்றோர்கள் பொய்யான ஆவணங்களைச் சமர்ப்பிக்கின்றார்கள் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க,

இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

குறைந்த வருமானங்களைப் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் பாடசாலை அனுமதிக்கான முழுத்தகைமைகளையும் பெற்றிருந்தால், அவர்களை உடனடியாக பிரபல பாடசாலைகளில் அனுமதிக்கவேண்டும். இது கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

எந்தவொரு வகுப்பிலும் 40 மாணவர்களுக்கு மேலாக மாணவர் இருக்கக் கூடாது.

இவைதவிர சுனாமி அனர்த்தத்தினால் மனநிலை பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான விசேட திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துமாறும் தேசிய பாடசாலைகளின் அதிபர்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கேட்டுள்ளார். (க-60)

## துப்பாக்கியுடன் இளைஞன் கைது

(மட்டக்களப்பு)

செங்கலடி பதுளை வீதி கொடுவாமடு இராணுவ முன்னணி காவல் நிலையப் பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இளைஞரொருவர் மைக்கிரோ ரக கைத் துப்பாக்கியுடன் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இவர் திருகோணமலையைச் சேர்ந்த கே.எம். சேக்ஸ்பியர் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையிலிருந்து வந்ததாகக் கூறப்படும் இவரது ஜககட்டிறகுள் இருந்து இவை மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் முன்னிலையில் இவ் இளைஞன் ஆஜர் படுததப்பட்ட போது, இவரை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ற)

## பிற்போடப்பட்டது

(பொன்னாலை)

நல்லூர் றோட்டறட்க் கழகத்தின் சமூகசேவை அர்ப்பணிப்பு நிதிக்காக வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருந்த 'கலைகளின் சங்கமம்' பிற்போடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சி எதிர்வரும் பெப்ரெவரி மாதம் 27 ஆம் திகதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-49)

## கூட்டம்

(சாவகச்சேரி)

தெனமராட்சி கிழக்கு கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (க-29)

# 40 மில்லியன் அமெ.டொலர் மீள் கட்டுமானத் திட்டம்!
## வேல்ட் விஷன் அறிமுகம்

(கொழும்பு)

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் மீள் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவென 40 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதிமிக்க திட்டம் ஒன்றினை வேர்ல்ட் விஷன் அறிவித்தலின் பிரகாரம் இத்திட்டம் இரு பிரிவுகளாக நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

முதற் கட்டமாக, 10 மில்லியன் அமெரிக்க டொலர்களில் பல்லாயிரக் கணக்கான மக்களின் உடனடித் தேவையான தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும். இத் திட்டம் 90 நாட்களில் நிறைவேற்றப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இரண்டாவது கட்டத்தில் மிகுதி 30 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் நிவாரணப் பணிகளுக்கும் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத் திட்டம் இரண்டில் இருந்து மூன்று வருடங்கள் வரை நீடிக்கலாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது. (ற)

## அழிவடைந்த பாடசாலைகளுக்குரிய
# தற்காலிக கொட்டில்களை அமைக்க யுனிசெவ் நிறுவனம் முன்வருகை

(திருநெல்வேலி)

சுனாமி அனர்த்தம் காரணமாக வடமராட்சி கிழக்கில் பல பாடசாலைகள் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

மாமுனை அ.த.க.பாடசாலை, செம்பியன்பற்று றோ.க.த.க.பாடசாலை மற்றும் தாளையடி, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடுப் பகுதி பாடசாலைகளும் சேதமடைந்துள்ளன. இந்தப் பாடசாலைகளுக்கான தற்காலிக் கொட்டில்களை அமைக்க யுனிசெவ் நிறுவனம் முன்வந்துள்ளது. (ற-43)

# விசேட கருமபீடத்தில் 7 முறைப்பாடுகள் பதிவு

(துன்னாலை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் சுனாமி அனர்த்த நிவாரண விநியோகத்தில் மோசடிகள் இடம்பெற்றால் அது குறித்து முறைப்பாடு செய்யவென பருத்தித்துறைப் பிரதேச செயலர் சி.வசந்தகுமாரால் அமைக்கப்பட்ட விசேட கரும பீடத்தில் இதுவரை 7 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அவை உடன் கவனத்திற்கு எடுக்கப்பட்டு பரிசீலனைக்குட்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

இப்பிரதேச செயல்கத்திற்கு பொலிஸ் காவல் போடப்பட்டுள்ளது. (ற-101)

# தொழிலாளர்களின் ஒத்துழைப்பு நாட்டின் அபிவிருத்திக்கு அவசியம்
## அரசு அதனைப் பெறத் தவறிவிட்டது என அமைச்சர் லால்காந்த கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாட்டை மீட்டெடுப்பதற்காக தொழிலாளர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கு இன்னும் அரசாங்கம் சிறந்த செயற்றிட்டமொன்றைத் தயாரிக்கவில்லை என்று தேசிய தொழிற்சங்க நிலையத்தின் தலைவரும் அமைச்சருமான கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

வேலை செய்யும் மக்களின் உழைப்பை நாட்டின் அபிவிருத்தியில் ஈடுபடுத்துவதற்கான ஏற்பாடுகளைத் தயாரிக்கும் பொறுப்பு அரசாங்கத்தினுடையது என்றும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

வேலை செய்யும் மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கான திட்டமொன்று அரசாங்கத்தினால் தயாரிக்கப்படாமை வருத்தத்திற்குரிய விடயமென்றும் அமைச்சர் லால்காந் சுட்டிக்காட்டினார்.

அரச ஊழியர்களின் ஒரு நாள் வேலை நேரம் 8 மணித்தியாலமாக இருந்த போதிலும் நாடு எதிர்நோக்கியுள்ள அனர்த்தத்தில் இருந்து மீட்பதற்காக தேசிய தொழிற்சங்க ஐக்கிய நிலையம் 12 மணிநேரம் வேலை செய்யத் தயாராக இருக்கிறது என அமைச்சர் லால்காந் தெரிவித்தார்.

இதேவேளை, இதன் காரணமாக அரச ஊழியர்களுக்கு வேலை செய்யும சந்தீர்ப்பத்தை அதிகரிக்க வேண்டும் என்று ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எனவே, பொதுவான நிலையின் கீழ் ஒன்றுக்கு 8 மணிநேர காலத்தையேனும் விரயம் செய்யாமல் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பங்காற்றக் கூடியதாக அரசாங்கம் சிறந்த செயற்றிட்டம் ஒன்றை தயாரிக்கவில்லை என்று அமைச்சர் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில மேலும் தெரிவித்துள்ளார்.(க-9)

# உப்பு உற்பத்திக்குப் பாதிப்பில்லை

(மருதங்கேணி)

சுனாமிககடல் கொந்தளிப்பால உப்பு உற்பத்திக்கு எதுவிதப் பாதிப்பும் ஏற்படவில்லை எனவும், எட்டு மாதங்களுக்குத் தேவையான உப்பு கையிருப்பில் இருப்பதாகவும் இலங்கை உப்புக் கம்பனி தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை பிரதான உப்பளத்தில் தற்பொழுது 40 ஆயிரம் மொற்ரித்தொன் உப்பு இருபபதாக நிறுவன உதவி பணிப்பாளர் ரி.டபிள்யூ.தெஹிவத்த தெரிவித்துள்ளார்.

கடல் கொந்தளிப்பால் உப்புக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், உப்பை பாவிக்க முடியாது எனவும் பரவலாகப் பேசப்படுவது சம்பந்தமாக கருத்துக் கூறுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கையின் மொத்த உப்புத் தேவை அம்பாத்தோட்டையில் உற்பத்தி செய்யப்படுவதாகக் குறிப்பிட்ட அவர், நவம்பர் முதல் பெப்ரவரியிலான காலப்பகுதியில் சுத்திகரிப்புப் பணிகள் இடம்பெறுவதாகவும் அக்காலப் பகுதியில் உப்பு உற்பத்தி செய்வதில்லை எனவும் தெரிவித்தார்.

கடல் கொந்தளிப்பினால் பிரதான உப்பள ஊழியர்கள் 35 பேர் இறந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (க-35)

## வடபிராந்திய போக்குவரத்துச் சபையின்
# பருத்தித்துறைச் சாலை ஊழியர்கள் நாளை சுகயீன லீவுப்போராட்டம்

(துன்னாலை)

வடபிராந்திய போக்குவரத்து சபையின் பருத்தித்துறைச்சாலை ஊழியர்கள் நாளை சுகயீன லீவுப் போராட்டம் ஒன்றில் ஈடுபடவுள்ளனர்.

வடபிராந்தியப் போக்குவரத்துச்சபையினர் பருத்தித்துறை சாலை ஊழியர்கள் தமக்குக் கடந்த வருடம் வழங்கப்படவேண்டிய போனஸ் பணம் இதுவரை வழங்கப்படாமை,

அதிகரித்த சம்பள உயர்ச்சி இதுவரை அரசினால் வழங்கப்படாமை, இவ்வருட பாடசாலை புத்தக முற்பணம் வழங்கப்படாமை ஆகிய 3 விடயங்களை முன்வைத்தே இப போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரியவருகிறது. (ப-101)

## சுனாமி அலையினால் பாதிக்கப்பட்ட
# பல்கலைக்கழக மாணவர்களுக்கு பத்தாயிரம் ரூபா வழங்கப்படும்?

(கொழும்பு)

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு சலுகையுடன் கூடிய வேலைத்திட்டங்களை அறிமுகப்படுத்த பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதியுதவி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென மானிய ஆணைக்குழுவின் உபதலைவர் பேராசிரியர் டபிள்யூ எல்.ரட்ணநாயக்க தெரிவித்தார்.

இயற்கை அனர்த்தத்தின் போது பெற்றோர்களை இழந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரண்ங்களுக்கு மேலதிகமாக மாதாநதம் 10 ஆயிரம் ரூபா வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சுனாமி பேரலையினால் 11 பல்கலைக்கழககங்களைச்சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் பெற்றோரை இழந்துள்ளாதாக தெரிவிக்கப்படுகிறது.

அவ்வாறு தாய் அல்லது தந்தையை இழந்த மாணவர்களுக்கும் வீடுகளை இழந்த மாணவர்களுக்கும் நிவாரணம் பெற்றுக் கொடுக்க ஆலோசித்துவருவதாகவும் பேராசிரியர் ரட்ணநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, கிழக்கு பல்கலைக்கழகம் தவிர சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள ஏனைய பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த 8 ஆயிரம் மக்கள் கிழக்கு பல்கலைக்கழகத்தில் தொடர்ந்தும் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களை அடுத்த சில தினங்களில் தற்காலிகமாக மாற்று இடங்களில் தங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென பல்கலைக்கழகமானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சுனாமி பேரலையின் காரணமாக பல்கலைக்கழகங்களுக்கு 72 மில்லியன் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (க-9)

## இன்று ஒரு தகவல்

# நடக்கலாமா?

'ஓடி விளையாடு பாப்பா' என்றுதான் சொல்கிறோம். 'ஓடி விளையாடு தாத்தா' என்று சொல்வதில்லை. ஏன்? தாத்தா ஓட ஆரம்பித்தால் தடுமாறி கீழே விழுந்து விடுவார். ஓடவேண்டிய வயதில் ஓட வேண்டும். நடக்கின்ற வயதில் நடக்கவேண்டும். நடப்பதென்றால்... சாதாரணமாக நினைத்துவிடாதீர்கள். அது ஒரு நல்ல பயிற்சி.

வயதான பலருக்கு பொதுவாக உள்ள பிரச்சினைகள் என்ன? மாலையில் பொழுது போவதில்லை. மனைவி கூட அருகில் வந்து பேச்சுக் கொடுப்பதற்குப் பயப்படுவார். வயதாகிவிட்டதால் உடற்பயிற்சியும் செய்ய முடிவதில்லை. அதனால் பேரப்பிள்ளையுடன் சேர்ந்து கிரிக்கெற் விளையாடுவதும் சிரமம். உடல் எடை அதிகரித்தது போல் தோன்றும் நீரிழிவு, இரத்த அழுத்தம் எனப்பல தொல்லைகள்.

இதற்கெல்லாம் ஒரே பரிகாரம் என்னதெரியுமா? பேசாமல் நடக்க ஆரம்பித்து விடுவதுதான். நடப்பது எல்லோருக்குமே நல்லது. வயதானவர்கள் மட்டும் தான் நடக்க வேண்டுமென்றில்லை. பெண்கள், குழந்தைகள் என எல்லோருக்கும் இது நல்லது. ஓய்வுபெற்ற பின்பு ஆரோக்கிய நிலையில் உள்ள பலரைச் சந்தித்து ஒரு கணக்கெடுப்பு நடத்தினார்களாம். அமெரிக்காவில் பலர் சொன்ன பதில் என்ன தெரியுமா? " நாங்கள் தினமும் நான்கு கிலோமீற்றருக்குக் குறையாமல் நடக்கிறோம். வாரத்துக்கு 6 நாட்கள் இப்படி நடக்கிறோம்'' என்றார்களாம். அதுமட்டுமல்ல...அவர்கள் அதிகநாள் உயிர்வாழ முடியும்.

நாம் நடக்கும் போது ..... நம்து உடம்பிற்குள் என்ன நடக்கிறது தெரியுமா? நடக்கும் போது நமது தோல் தசை இதற்கெல்லாம் பிராணவாயு கிடைக்கும். அதனால் சக்தியை வெளியிடும் திறமை நமது உடலுக்கு அதிகரிக்கும். நடப்பதனால் இருதய நோய், மூச்சு சம்பந்தப்பட்ட நோய்கள் போன்றவை ஏற்படாமல் பாதுகாப்புக் கிடைக்கும். சுவாசப்பை, இருதயம் போன்றவற்றிற்கு நிதானமான பயிற்சி கிடைக்கும். வேகமாக நடக்கும் போது இரத்தக் குழாய்கள் விரிவடையும். இரத்த ஓட்டம் சுறுசுறுப்படையும். இருதயப் பகுதிக்கு இரத்தம் வசதியாகக் கிடைக்கும். சிகரெட் பிடிப்பவர்களின் இரத்தத்தில் கரியமிலவாயு, நிக்கொட்டின் போன்ற நச்சுப் பொருட்கள் இருக்கும். அவற்றைச் சரி செய்ய நடப்பது மிகவும் நல்லது.

இவ்வளவையும் கேட்டபின்பு.... ''சரி நாமும் நடந்து பார்ப்போமே என்ற முடிவுக்கு வந்துவிட்டீர்களா?'' அப்படியென்றால் உங்களுக்கு சில ஆலோசனைகள்.

நடக்க ஆரம்பிக்கிறேன் என்று சொல்லி திடீரென்று நாகர்கோயில் வரைக்கும் போகிறேன் என்று கிளம்பிவிடாதீர்கள்! முதலில் ஒரு நாளைக்கு இரண்டு கிலோமீற்றர் என்று ஆரம்பியுங்கள். அதன்பின் சிறிது சிறிதாக அதிகமாக்கி ஐந்து கிலோமீற்றர் வரைக்கும் செல்லுங்கள் அதுபோதும். எப்போதாவது சமயம் கிடைக்கும் போது நடப்போம் என்று நினைக்காதீர்கள். இதை தினசரி ஒரு பயிற்சியாக வைத்துக்கொள்ள வேண்டும். தினமும் ஒரு மணி நேரம் நடப்பது என்றால் அதைக் காலையில் அரை மணித்தியாலம், மாலையில் அரைமணித்தியாலம் என்று பிரித்துக் கொள்ளலாம். முதலில் 15 நிமிடம் நடப்பது படிப்படியாக அதை அதிகரித்து ஒரு மணித்தியாலமாக்கலாம். இதை இரண்டு மாதத்தில் கொண்டு வந்தால் போதும்.

சரி எவ்வளவு வேகத்தில் நடப்பது? உங்கள் நலனைப் பொறுத்து இதைத் தீர்மானிக்கலாம். மணிக்கு மூன்று முதல் 5 கிலோமீற்றர் வேகம் வரை நடக்கலாம். இருதயக் கோளாறு உள்ளவர்கள், மூச்சுக்கோளாறு உள்ளவர்கள் எல்லாம் முதலில் டாக்டரிடம் ஆலோசனை பெறுவது அவசியம்.

சாப்பிட்டவுடன் குளிர் காற்றிலோ நல்ல வெயிலிலோ நடக்காதீர்கள். நடக்கும் போது கால் அசதியாக உள்ளதா? மூச்சிரைக்கிறதா? பரவாயில்லை கொஞ்சநேரம் உட்கார்ந்து ஓய்வு எடுத்துக் கொண்டு நடக்கலாம். அதற்காக மல்லுக்கட்டிக் கொண்டு கையையும் காலையும் வீசிக் கொண்டு போகாதீர்கள்.

நடக்கும் போது நீங்கள் அணிந்துள்ள உடை, காலணி போன்றவை இறுக்கமாக இருக்கக்கூடாது. தளர்வாக சுகமாக இருக்கவேண்டும். கூடவே ஒரு நண்பர், கணவன் இல்லாவிட்டால் மனைவி இவர்களும் நடந்தால் சிரமம் தெரியாமலிருக்கும். சிலருக்கு அதுவே ஒரு பெரிய சிரமமாகிவிடுவதும் உண்டு.

கருவுற்றதாய்மார்கள் தினமும் 2 கிலோமீற்றர் நடப்பது நல்லது. கோயில் பிரகாரத்தைச் சுற்றிவரும் பழக்கம் எதற்காக? சூடேறிய கருங்கல் பாதத்தில் பட்டால் அது ஒத்தடம் கொடுப்பது மாதிரி. வயதானபின் வேலையின் நெருக்கடியைக் குறைத்துக் கொள்ளலாமே தவிர அதற்காக ஒரே இடத்தில் உட்கார்ந்து விடக்கூடாது. 60 வயது ஆனால் இருதயம் வேலை செய்யும் திறன் 5 இல் ஒரு பங்கு குறைந்துவிடும். அதே சமயம் இரத்த அழுத்தம் 5 இல் ஒரு பங்கு கூடிவிடும். அதனால் இருதயத்திற்கு இரண்டு விதத்திலும் பாதிப்பு. இதைச் சரி செய்வதற்கு சிறந்த வழி நடப்பது தான்.

ஒருவர் சொன்னார் "எனக்கு இருதய நோய் வராமல் இருப்பதற்குக் காரணமே எனது உயிர் நண்பர் ஒருவர் தான்'' என்றார். "எப்படி?'' என்று கேட்டால் அதற்கு அவர் சொல்கிறார் "அந்த ஆளிடம் 5 வருடத்திற்கு முன்பு 50 ரூபா கடன் கொடுத்தேன் அதை வசூல் செய்வதற்கு இன்னும் நடையாக நடந்து கொண்டிருக்கிறேன்'' என்றார். அதுவும் சரி தான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன

## கலாநிதி தாரா டி மெல் தெரிவிப்பு

(கொழும்பு)

புனர்நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இருந்து தற்போது தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதாக தேசிய அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கை நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி தாரா டி மெல் தெரிவித்தார்.

இதற்கு பிரதேச செயலக மட்டத்தில் தேவையான விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக கேள்விக்கொத்து விநியோகிக்கப்பட்டுள்ளது.

இந் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக பிராந்திய மற்றும் மாகாண செயலகங்களுக்கு விநியோகிக்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களின் சேவை பெறப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட சகல குடும்பங்களினதும் தகவல்களைப் பெற்று அபிவிருத்தி மற்றும் புனர்நிர்மாண நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளவுள்ளது.

இத் திட்டத்தை பயனுள்ள வகையில் அமுல்படுத்துவதற்கு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்தும் கூட தகவல்கள் பெற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் இருக்கின்றது.

நாட்டின் சகல பகுதிகளையும் துரிதமாக மீளக்கட்டியெழுப்புவதே ஜனாதிபதியின் நோக்கமாகும. இப்பகுதிகளில் புனர்நிர்மாண புனரமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கென ஜனாதிபதி மூன்று விசேட பணிக்குழுக்களை நியமித்துள்ளார்.

அதன் பிரகாரம் அவர்களே அப்பணிகளை மேற்கொள்வார்கள் எனவும் தாரா டி மெல் தெரிவித்தார். (ற-4)

## கோட்டைக்கல்லாறு பாலமூடாக வாகனப் போக்குவரத்து ஆரம்பம்

(மட்டக்களப்பு)

ஆழிப்பேரலையினால் சேதமடைந்த மட்டக்களப்பு - கல்முனை வீதியிலுள்ள கோட்டைக்கல்லாறு பாலம் வழியாக நேற்று முன்தினம் முதல் வாகனப் போக்குவரத்து சேவைகள் நடைபெறுகின்றன.

விடுதலைப் புலிகள் இவ் வழியான தரைவழிப் போக்குவரத்து சேவையின் அவசியத்தை உணர்ந்து இதற்கான மாற்றுப் பாதையொன்றை அமைத்துள்ளனர்.

மட்டு - அம்பாறை மாவட்ட இராணுவத் தளபதி பிரபாவின் ஆலோசனையின் படி விடுதலைப்புலி போராளிகள் மக்களின் பங்களிப்புடன் ஒரு வலுவான தற்காலிகப் பாதையை அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இப்பாதை வழியாக கனரக வாகனங்களும் பயணிகள் வாகனங்களும் செல்லக் கூடியதாக உள்ளது. இதேவேளை, ஆழிப்பேரலையினால் உப்புநீர் தாக்கத்தின் காரணமாக உவா நீராக மாறியிருக்கும் கிணறுகளை நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் சுத்தம் செய்யும் பணிகளில் களுவாஞ்சிக்குடி முதல் பெரிய கல்லாறு வரையிலான கரையோரப் பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர்.. (ற)

## இராசி பலன்

**24.01.2005**
**(தை 11 திங்கட்கிழமை)**
**சதுர்த்தசி பிற்பகல் 2.41 மணிவரை**
**புனர்பூசம் பின்னிரவு 12.17 மணிவரை**
**இராகுகாலம் 8.06 - 09.36 மணிவரை**
**சுபநேரம் 12.36 - 02.06 மணிவரை**
**அமிர்தசித்தம்**

**மேடம்** நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, புதிய விடயம், போசன நன்மை.

**இடபம்** மாதர் நட்பு, காரிய தாமதம், விவாதம் பணவிரயம்.

**மிதுனம்** தேக நலன், நல்ல முயற்சி, உறவினர் வருகை, சயன சுகம்.

**கடகம்** காரிய அலைச்சல், மனஸ்தாபம், தொழில் மந்த நிலை, பணவிரயம்.

**சிங்கம்** கீர்த்தி, தனலாபம், தடைப்பட்ட காரியம் கைகூடும், கலந்துரையாடல்.

**கன்னி** நண்பர்கள் உதவி, அதிகாரம், புதிய தொழில் சிந்தை, விருந்துபசாரம்.

**துலாம்** சரீரப்பிரயாசை, வீண்பயம், காரிய தாமதம், பணவிரயம்.

**விருச்சிகம்** உறவினர் மனஸ்தாபம், உடல் நலக் குறைவு, அப கீர்த்தி, முயற்சி தாமதம்.

**தனுசு** பெருமையடைதல், நல்ல முயற்சி, தெய்வ சிந்தை, குடும்ப சுகம்.

**மகரம்** நல்ல செய்தி, எடுத்த கருமங்கள் கைகூடும், பணவருவாய், உற்சாகம்.

**கும்பம்** மரியாதைக்குறைவு, முயற்சி தாமதம், பண விரயம், தொழில் சிந்தை.

**மீனம்** வேலைச்சுமை, முயற்சி தாமதம், நண்பர்கள் சந்திப்பு, புதிய தகவல்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது - வளவன்

## இலங்கைக்கு தொடர்ந்தும் வெளிநாடுகள் நிவாரண உதவி

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கிலும், புனரமைப்புப் பணிகளில் ஈடுபடும் நோக்கிலும் வெளிநாட்டு நிவாரணப் பணிக்குழுவினர் தொடர்ந்தும் இலங்கை வந்த வண்ணமுள்ளனர்.

இங்கிலாந்து,பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளைச் சேர்ந்த நிவாரணக்குழுவினர் நேற்று முன்தினம் இலங்கை வந்தடைந்தனர்.

இங்கிலாந்தில் இருந்து சுகாதார சேவைகளை வழங்குவதற்காக நிவாரணப் பணிக்குழுவினர் நேற்று முன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

இந்த நிவாரணப் பணிக்குழுவில் மருத்துவர்களும் தாதிமார்களும் அடங்குகின்றனர்.

இவர்கள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு சென்று சுகாதார சேவைகளில் ஈடுபடவுள்ளனர்.

இவைதவிர நிவாரணப் பொருட்களை ஏற்றிய பிரான்ஸ் நிவாரண சேவைக்கு சொந்தமான விசேட விமானம் ஒன்று நேற்று முன்தினம் இலங்கையை வந்தடைந்துள்ளது.

இந்த விமானத்தில் நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்துவதற்காக இரண்டு விசேட வாகனங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதேவேளை, இத்தாலியைச் சேர்ந்த மற்றுமொரு நிவாரணப் பணிக்குழுவினர் நேற்று இலங்கையை வ[illegible]ந்தனர்.

இதில் பொறியியலாளர்களும், நிபுணர்களும் இத்தாலியில இருந்து இலங்கையை வந்தடைந்துள்ளார்கள். இவர்கள் பாதிக்கபபட்ட இடங்களில் நிவாரணப் பணிகளில் ஈடுபடவுள்ளனர். (க-9)

## சித்திரத்தேர் நிர்மாணம்

(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நடராஜப் பெருமானுக்கான புதிய சித்திரத்தேர் அமைக்கும் கால்கோள் விழா நாளை செவ்வாய்க்கிழமை ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெறவுள்ளது.

இப் புதிய சித்திரத்தேர் ஈழத்து ஸ்தபதி தலைமையில் இந்திய சிற்பாச்சாரியார்களினால் அமைக்கப்படவுள்ளது.

முப்பத்தொன்பது அடி உயரமான இச் சித்திரத்தேரில் கலசம், விமானம் என்பன தங்க முலாம் பூசப்பட்டு தங்கத்தேராக அமைக்கப்படவுள்ளது.

தேரினைச் சுற்றி நடராஜப் பெருமானின் 108 தாண்டவங்களையும், அறுபத்துமூன்று நாயன்மார்களையும் உள்ளடக்கிய சிவபொருமனின் அற்புதம், மாணிக்கவாசகரின் வரலாறு, ஐயனார் ஆலய, திருனம்பிட்டி வைரவர் ஆலய வரலாறு என்பன அமையப் பெற்றதாகவும் அமைக்கப்படவுள்ளது.

இந்திய சிதம்பரத்தின் தேருக்கு ஒப்பான தங்கமுலாம் பூசப்பட்ட சித்திரத்தேர் இவ் வருடமே அமைக்கப்பட்டு திருவம்பாவை, திருவாதிரை உற்சவத்திற்கு வீதியுலா வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது இலங்கையிலே உள்ள ஆலயங்களை விட உயரமான தேராகவும் பெறுமதி கூடியதாகவும் அமையவுள்ளது குறிப்பிடத்தக்கது. (க-246)

# ரூ. 5000 மாதாந்தக் கொடுப்பனவு மக்கள் வங்கிக் கிளைகள் ஊடாக நாளை முதல் வழங்கப்படவுள்ளது

(அம்பாறை)

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தலா 5ஆயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவு உடனடியாக வழங்கப்படும். இந்தக் கொடுப்பனவுகள் மக்கள் வங்கிக்கிளைகள் ஊடாக நாளை செவ்வாய்க்கிழமை முதல் வழங்கப்படவுள்ளதாக நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட குடும்பத்தினா அவர்களது வாராநத உள் உணவு பங்கீட்டு அட்டைகளை வங்கிகளில் சமர்ப்பித்து தங்களுக்கான கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்துக்கு விஜயம் செய்த நிதியமைச்சர் சரத் அமுனுகம புனரமைப்பு வேலைகளையும், நலன்புரி நடவடிக்கைகளையும் பார்வையிட்டார்.

அதன்பின்னர் அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற விசேட கூட்டமொன்றில் கலந்துகொண்டார். இக் கூட்டத்தில் அமைச்சர் பேரியல் அஷ்ரப், பிரதியமைச்சர் விமல் ரத்நாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர். (ற-4)

# காரைநகரில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு

காரைநகர் பாடசாலை மாணவர்களுக்கு காரைநகர் ஈழத்துச் சிரம்பர அறப்பணி நிலையத்தினால் மதிய உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த புதன்கிழமையிலிருந்து காரைநகர் கலாநிதி தியாகராஜா மததிய மகாவித்தியாலய மாணவர்களுக்கு முதற் கட்டமாக மதிய உணவு வழங்கும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் கோரிக்கையையடுத்தே இவ மதிய உணவு வழங்கும் நிகழ்வு ஈழத்துச் சிரம்பர அறப்பணி நிலையத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

காரைநகரில் உள்ள ஏனைய பாடசாலைகளான காரைநகர் யாழ்ரன் கல்லூரி, வியாவில் சைவ வித்தியாசாலை, மெய்கண்டான் வித்தியாலயம், சுந்தரமூர்த்தி வித்தியாலய மாணவர்களுக்கும் இவ்வாரம் முதல் மதிய உணவு வழங்கப்படவுள்ளதாகவும் அதற்காக மேற்படி பாடசாலை அதிபர்களை அறப்பணி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறும ஈழத்துச் சிரம்பர அறப்பணி நிலையத்தினர் கேட்டுள்ளனர்.

இதனால் மேலதிகமான கறறல் செயற்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுவதுடன் உடல் நலமும் பாதுகாக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-246)

# 10 மில்லியன் ரூபா நிதியை தலதா மாளிகை வழங்கும்

(கொழும்பு)

ஆழிப்பேரலையின் பேரழிவிற்கு உள்ளான பிரதேசங்களில், வீடுகளை இழந்த மக்களுக்குப் புதிதாக வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கென 10 மில்லியன் ரூபாய் நிதியை தலதா மாளிகை வழங்குவது பற்றி கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது.

கண்டியில் நடைபெற்ற இது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இத திட்டத்திற்கென தலதா மாளிகையின் நிதியில் இருந்தே 10 மில்லியன் ரூபாய் நிதி அனபளிப்புச் செய்யப்படவுள்ளது. இதனைவிட மஹியங்கனை ராஜ மஹா விகாரையும் 50 ஆயிரம் ரூபாயை அன்பளிப்புச் செய்துள்ளது. (ற)

# பல்கலைக்கழகங்களுக்கு ஏற்பட்ட சேதம் 4 கோடி ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது

(கொழும்பு)

'சுனாமி' கடற் கொந்தளிப்பினால பல்கலைக்கழகங்களுக்கு ஏற்பட்ட இழப்பு 4கோடி ரூபா என மதிபபிடப்பட்டுள்ளதாக பல கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

றுகுணு, கிழக்கு, மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகங்களில் பெரும்பாலான கட்டடங்கள் சுனாமியால் தேசமாடைந்திருக்கின்றன.

இந்தக் கட்டடங்களை மீளப் புனரமைப்பதற்கு உதவி வழங்குவதற்காக பல சர்வதேச அமைப்புக்கள் முன்வந்திருப்பதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அனர்த்தத்தைத் தொடர்ந்து மேறபடி பல்கலைக்கழகங்களில் கல்வி பயின்ற சுமார் 100 ற்கும் மேற்பட்ட மாணவர்கள் காணாமல் போயுள்ளனர் என்றும் 11 மாணவர்கள் பெற்றோரை இழந்துள்ளனா என்றும் அவ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த மாணவர்கள் தொடாந்தும் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் உதவிகளை வழங்குவதற்கு புதிய திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்காக ஏற்கனவே 20 இலட்சம் ரூபா நிதி சேகரிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மேலும் தொவித்துள்ளது.(ற-4)



அமரர் பேரம்பலம் நினைவாக தேசிய எழுச்சிப் பேரவையினால் காரைநகர் பிட்டியெல்லையில் ரமேஸ் முன்பள்ளிக்கு கட்டடம் அமைக்கப்பட்டு அண்மையில் திறப்புவிழா இடம்பெற்றது.

இந் நிகழ்வில் காரைநகர் தென்கிழக்கு கிராமசேவையாளர் இ.இராசதுரை மங்கள விளக்கு ஏற்றுவதனையும், காரைநகர் தேசிய எழுச்சிப் பேரவை செயலர் வே.சிற்சபேசன், காரைநகர் அரசியல் துறைப் பொறுப்பாளர் து.கானகன், தமிழர் புனர்வாழ்வுக கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் ஆகியோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:- காரைநகர் செய்தியாளர்).

## வீதி திருத்தப்படவில்லை

(பொன்னாலை)

மாவடி-மூளாய் வீதி பாரிய குன்றும் குழியுமாகக் காணபபடுகின்றது.

786ஆம இலக்க யாழ்-காரைநகர் பயணிகள் பஸ் போக்குவரத்துச் சேவை இவ்வீதி ஊடாகவே இடம்பெற்று வருகின்றது. கடந்த பெருமழையின் போது இவ்வீதி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வலி-மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட இவ் வீதி கடந்த வருடம் புனரமைக்கப்பட்ட போதும் மீண்டும் பாரிய குன்று குழிகள் தோன்றி சேதமடைந்துள்ளது.

இதனால் போக்குவரத்திற்கு மிகவும் சிரமம் ஏற்படுகின்றது.

பயணிகள் பஸ்சேவை பாடசாலை மாணவர்கள், தொழிலாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் போக்குவரத்தில் ஈடுபடும் இவ்வீதியை மிக விரைவில் செப்பனட வேண்டுமெனப் பொதுமக்கள் சம்பந்தப்பட்டவாகளிடம் வேண்டுகோள் விடுக்கின்றனர். (க-49)

# வீதி புனரமைப்பு குறித்து பொது மக்கள் விசனம்

(காரைநகா)

காரைநகர் பிரதான வீதி தரமற்ற முறையில் புனரமைக்கப்பட்டு வருவதாக பொதுமக்களால காரைநகர் பிரதேச செயலகததிலும், வீதி அபிவிருத்தி அதிகார சபையிலும் முறையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காரைநகர் மேற்கு வீதி பல வருடங்களாக திருத்தப்படாமையினால் குன்றும் குழியுமாக படுமோசமாக சேதமடைந்துள்ளது.

இதனால் காரைநகர் மேற்கு வீதிக்கான வடபிராந்திய போக்குவரத்து சபையின் சேவையும் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் காரைநகர் மேற்கு வீதிக்கான புனரமைப்பிற்கு பெருமளவு கற்கள் பறிககப்பட்ட போதும், உடைந்த வீட்டு கழிவு கற்களைக்கொண்டு குழிகளை நிரவியும், தரமறற முறையில் மேலோட்டமாக புனரமைக்கபபட்டுவருவது குறித்து பொதுமக்கள தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (க-246)



பதுளை மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு. மார்ஷல் இராஜநாயகம், யாழ்.மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு.ஜேக்கப் நீக்கொலஸ் ஆகியோருக்கு அவர்களது சொந்த ஊரான மிருசுவிலில் அண்மையில் வரவேற்புவிழா ஒன்று நடாத்தப்பட்டது. இங்கே விழா நாயகர்கள் இருவரும் மிருசுவில் புனித நீக்கொலஸ ஆலய முன்றலில் சக குருக்களாலும், பங்கு மக்களாலும் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

## இது நியாயமா?

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை-வழுக்கையாறு இந்துமயான வளாகத்தில் குப்பை கூழங்கள் பெருமளவு கொட்டப்படுகின்றன.

இதனால் மயானப் பகுதியில் தகனக் கிரியைகளை மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது.

வலி-மேற்கு சுழிபுரம் பிரதேச சபை நிர்வாகத்திற்குட்பட்ட இம்மயானப் பகுதியில், பிரதேச சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்களே கழிவுகளைக் கொட்டி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

பாதுகாப்பு-பராமரிப்பு பணிகளில் ஈடுபட வேண்டியவர்கள் இவ்வாறு நடந்துகொள்வது பொதுமக்கள் மத்தியில் கடும விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (க-49)

# காரைநகர் கிராமங்களில் சட்டவிரோத மின்பாவனை

(காரைநகா)

காரைநகர் தோப்புக்காடு, கல்வந்தாழ்வு கிராமங்களில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தமது வீடுகளுக்கு சட்ட விரோதமான முறையில் மின்சாரத்தைப் பெற்று வருகின்றனர்.

இதனால் உயிரிழப்புக்கள் ஏறபடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

காரைநகர் தோப்புக்காடு கல்வநதாழ்வு கிராமத்தில் பிரதான மின்கம்பத்தில் இருந்து 500 மீற்றருக்கு மேற்பட்ட தூரத்திற்கு சாதாரண வயர்கள் மூலம பாதுகாப்பற்ற முறையில் மின்சாரத்தினைப் பெற்று அதனூடாக பல வீடுகள் சடடவிரோத மின்சாரத்தைப் பெற்ற வருகின்றன.

வீடுகளிலும் பாதுகாப்பற்ற முறையில் தற்காலிக மின் இணைப்புக்களை பொருத்தியுள்ளதுடன் வீதிகளிலும் மின் விளக்குகளைப் பொருத்தியும் உள்ளனர்.

சாதாரணமாக எவருமே காணக்கூடியதாக பொருத்தப்பட்டுள்ள இச் சட்டவிரோத மின் இணைப்பை மின்சாரசபை உத்தியோகத்தர்களும் ஏனைய பொறுப்பான அதிகாரிகளும் கண்டும் காணாததுபோல் விட்டிருப்பதனால் வீணான உயிரிழப்புகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர். (க-246)

## சிறந்த பொறிமுறைகளுடன் இயங்காத

# வாகனங்கள் சிலவற்றை பொலிஸார் தடுத்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் போக்குவரத்தில் ஈடுபடும் பெரும்பாலான வாகனங்கள் ஒழுங்கான பொறிமுறைகள் இன்றியே சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

இதனாலேயே வீதிவிபத்துக்கள் அதிகமாக இடம்பெறுகின்றன. இதனைத் தவிர்க்கும் முகமாக நேற்றையதினம் யாழ். போக்குவரத்துக் கண்காணிப்புப பொலிஸார் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இவ்வாறு சிறந்த பொறிமுறைகளுடன் இயங்காத சில வாகனங்களை யாழ்.பொலிஸார் சோதனை செய்து யாழ்.செயலகத்தின் முன்பாக தடுத்து வைத்துள்ளார்கள்.

இவ் வாகன சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ற-19)

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர்கள் 20 பேர் இரத்ததானம் செய்துள்ளனர்.

சுனாமியால் பாதிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோரினது இரத்த தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடனேயே இரத்ததானம் செய்யப்பட்டுள்ளது. (ப)

# கற்றல் உபகரணங்களை யுனிசெவ்வும் வழங்கும்

(பொன்னாலை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பிரதேச மாணவர்களுக்கு யுனிசெவ் நிறுவனம் கற்றல் உபகரணங்களை வழங்க முன்வந்துள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சுமார் 2 ஆயிரத்து 280 மாணவர்களுக்கே இவ்வாறு கற்றல் உபகரணங்களை வழங்க யுனிசெவ் நிறுவனம் முன்வந்துள்ளது.

இக்கற்றல் உபகரணங்கள் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்கள் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க-49)

# சிறுவர் அரங்கம்





## விடுகதைகள்

1.பருத்த வயிற்றுக்காரன் படுக்கையில் கிடப்பான் அவன் யார்?

2.தண்ணீரில் தாவும் கப்பல் தரையில் பாயும் கப்பல் அது என்ன?

3.குளம்படி ஓசைக்காரன், போருக்குப் பின்நிற்காதவன் அவன் யார்?

4.பறக்கும் ஆனால் பறந்து செல்லாது அது என்ன?

5.வாலால் நீர்குடிக்கும் வாயால் பூச்சொரியும் அது என்ன?


6.சின்னத்தம்பிக்கு தொப்பியே வினை அது என்ன?

*க.மலர்வழி,*
*கந்தரோடை.*


## இது உங்கள் ஓவியங்கள்



ச.நிசாந்தன்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.



த.புலேந்திரன்,
யா/ஸ்ரீகணேச வித்தியாலயம்.



ப.கம்ஷா,
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.

## பார்வை கொடுத்த நண்பன்!

சிறுவன் சுமன் பிறவியிலேயே பார்வையில்லாதவன். அவனுடைய தந்தை ஒரு கல்நெஞ்சக்காரர். ஒருநாள் ‘உனக்கு உணவளிக்க என்னடம் பணம் ஒன்றும் இல்லை. அதனால் நீ எங்கு வேண்டுமானாலும் சென்று பிழைத்துக் கொள். இனிமேல் இந்த வீட்டில் உனக்கு இடமில்லை’ என்று சுமனிடம் உத்தரவிட்டார்.

அப்போது மனது புண்பட்ட சுமன் தன் அன்பான நாயுடன் கிளம்பிவிட்டான். ஊர். ஊராகச் சுற்றி பிச்சையெடுத்தான். தன் சின்ன எஜமானனுடன் ஒருகுச்சியை வாயில் கவ்விக்கொண்டு மேடு பள்ளங்கள், காடுகள், குறுக்கு வழிகளில் ஒரு வழிகாட்டியாகவும், நடைகாட்டியாகவும் இருந்து பிச்சையெடுக்க உதவியது நாய்.



அந்த நாய்க்கு சில யுக்திகள் கற்றுக் கொடுத்திருந்தான் சுமன். அவன் தன் கைகள் இரண்டையும் தட்டினால் நாய் தலைகுனிந்து நிலத்தைத் தொட்டு வணங்கும். இதைப் பார்த்துப் போகவரும சனங்கள் மகிழ்ந்து காசு கொடுப்பர்.

இப்படியே நாயும் அவனும் கிடைத்த உணவைப் புசித்து கிடைத்த இடத்தில் படுத்து நாட்களைத் தள்ளினர். ஒரு நாள் பெரியவர் ஒருவருக்கு தனக்குக் கிடைத்த உணவைப் பகிர்ந்தளித்தான். அவர்,

‘மகனே நீ எனக்கு செய்த உதவிக்கு கைமாறாக நான் உனக்கு ஒரு உதவி செய்கிறேன்’ என்றார்.

‘ஐயோ எனக்கு ஒன்றும் தெரியவில்லையே. நான் பிறவிக்குருடன் ஆயிற்றே’ என்றான் சுமன். ‘குழந்தாய பயப்படாதே. குருடனென்று வருத்தம் கொளளாதே. நான் உனக்கு உதவுகிறேன்’

‘நீர் எனக்குப் பார்வை கொடுப்பீரா?’ என்று ஆவலோடு கேட்டான் சுமன்.

‘அது என்னால் முடியாது. ஆனால் அதைப் பெற என்னால் சில உதவிகள் செய்யமுடியும். உன்னாலான உதவிகளை அவ்வப்போது நீ மற்றவருக்குச் செய்துகொண்டேயிரு. நீ மற்றவர்களுக்குக் காட்டும் கருணையைப் பொறுத்து உன் பார்வை உனக்குத் திரும்பக் கிடைக்கும். பொறுமையுடன் இரு. சிறிது, சிறிதாக உன் பார்வை உனக்குத் திரும்பக் கிடைக்கும். ஆனால் சுயநலமோ அல்லது தயையின்மையோ தலைகாட்டினால் அல்லது ஏதேனும் கெட்ட குணங்களை நீ ஏற்படுத்திக் கொண்டால் உன் பார்வை இன்னும் மோசமாகிவிடும்’ என்ற பெரியவர் மறுநிமிடம் மறைந்தார்.

மறுநாள்....

ஒரு பார்வையற்ற ஏழைப் பிச்சைக்காரனை சந்தித்தான் சுமன். அவனுக்கு கால்களும் இல்லை. அவன்மீது இரக்கம் கொண்ட சுமன் தன்னிடமிருந்த சில்லறையை எடுத்து அவருக்குக் கொடுத்தான். கொஞ்சம் நிழல்போல் அவனுக்குத் பார்வையும் வந்தது.

அடுத்தநாள் சுமனும் நாயும் ஒரு பாழடைந்த ஆலயத்தில் உறங்கச் சென்றனர். அங்கு ஓரத்தில் ஒரு கிழவி பசியினால் தவித்து முனகிக்கொண்டிருந்தாள். தன் சிறு மூட்டையிலிருந்த ரொட்டிகளை அந்தக் கிழவிக்குக் கொடுத்தான். இராத்திரி ஆனதால் பிச்சையெடுக்க வழியில்லாமல் அப்படியே சுமனும் நாயும் உறங்கிவிட்டனர். பொழுது விடிய எழுந்திருக்கையில் அவனுடைய கண்பார்வை இன்னும் கொஞ்சம் நன்றாகவே தெரிய ஆரம்பித்துவிட்டது. இதனால் மகிழ்ச்சியடைந்த சுமன் இறைவனுக்கு தன் நன்றியைத் தெரிவித்துக்கொண்டான்.

அடுத்த நாள் எழுத்திருக்கையிலேயே சுமனுக்கும் நாய்க்கும் பயங்கரமான பசி. சுமனும் நாயுமாகப் பிச்சையெடுக்க சென்றனர். ஒரு ஆற்றோரமாகச் செல்லுகையில் தூரத்திலிருந்து ஒருகுரல் கேட்டது. ‘ஐயோ என்னைக் காப்பாற்றுங்கள் நான் முழ்கிக்கொண்டிருக்கிறேன்’.

சுமனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவனுக்கோ நீச்சல் தெரியாது. ஆனால் நாய்க்குத் தெரியும். நாய்க்கு குரல் வரும் திக்கைக் காட்டி, முழ்கும் மனிதனைக் காப்பாற்ற நடித்துக் காட்டி கட்டளையிட்டான். புத்தியுள்ள நாய் உடனே ஆற்றில் குதித்து, நீந்திச் சென்று அநத மனிதனைக் காப்பாற்றிக் கரை சேர்த்தது. ஆனால், தண்ணீரை நிறையக் குடித்துவிட்டதால் அது மூச்சுவிட முடியாது தவித்து உடனேயே இறந்துவிட்டது. துக்கம் தாளாமல் சுமன் அழுது அழுது ஏங்கிப்போய் உட்கார்ந்திருக்கையில் அவனுக்கு கண் பார்வை நன்கு தெரிய ஆரம்த்தது.


சுமன் நாயை அணைத்துக் கொண்டு ‘என் அன்புமிக்க நாயே, மனிதனைவிட நீ எத்தனையோ மடங்கு உயர்ந்தவன். உன்னை என் உயிருள்ள மட்டும் மறக்க மாட்டேன். வாயில்லாப் பிராணியான நீ குருடாக இருந்தபோது ஊன்றுகோலாக இருந்து எனக்கு உதவினாய். இறந்த பிறகும் உன் தியாகத்தால் எனக்கு பார்வை கிடைகக உதவியுள்ளாய்’ என்றுகூறி அதை அடக்கம் செய்தான்.

## உடற் பயிற்சி

உடற்பயிற்சி செய்திட்டால்
உடலும் உறுதி யாகிடுமே
உடலும் உறுதி யானாலே
உலகில் நெடுநாள் வாழ்ந்திடலாம்

காலை மாலை தவறாமல்
கவனத்துடனே உடற்பயிற்சி
காலமெல்லாம் பழகிட்டால்
களிப்பாய் நாமும் வாழ்ந்திடலாம்

இளமையான வயது முதல்
இனிதாய் பயிற்சி செய்துவரின்
வலிமையான உடலோடு
வாழ்ந்து சாதனை புரிந்திடலாம்!



*பாத்திமா.*

## உங்களுக்குத் தெரியுமா?

1. Science (விஞ்ஞானம்) என்ற சொல் எப்படித் தோன்றியது?
Science என்பது லத்தீன் பதம். அதற்கு I know (எனக்குத் தெரியும்) என்று பொருள்.

2. மின்மினிப்பூச்சி இரவில் மினுக்மினுக்கென்று வெளிச்சம் தருவது எப்படி?

அது சுவாசிக்கும் போது வலது பாகம் விரிந்து சுருங்குகிறது. அதனுள் ஒரு வகை இரசாயன மாறுதல் நிகழ்கிறது. அப்போது ‘மினுக்’ ஒளி உண்டாகிறது.

3. ஞாயிறு விடுமுறை எந்த ஆண்டில் தொடங்கியது?

கி.மு.321ஆம் ஆண்டில் ரோமாபுரி மன்னன் கான்ஸ்டன்டைனால் ஞாயிறு விடுமுறை விடப்பட்டது.

## உலக அதிசயங்கள்


### இடைக்கால உலக அதிசயங்கள்

* ரோமின் கொல்லோசியம் அரங்கம்
* நான்கிங்கின் பீங்கான் கோபுரம்
* இங்கிலாந்தின் ஸ்டோன் ஹெஞ்சல் எனப்படும் மனிதப் புதைவிடக் கற்கள்
* பைசா நகரத்து சாய்ந்த கோபுரம்
* சைனாவின் பெரிய சுவர்
* கான்ஸ்டாண்டி நோபிளின் புனித சோமியா மசூதி
* அலெக்ஸாந்தியாவின் அடிநிலக்குடைவுக் கல்லறைகள்

## புதிர்

ஏழு அப்பிள் பழங்களைப் பன்னிரண்டு பேருக்கு சமமாக பங்கிட வேண்டும். ஒரு அப்பிள் பழத்தை அதிகமாக நான்கு துண்டுகள் வெட்டலாம். அதற்கு மேல் வெட்டக்கூடாது. எப்படிப் பங்கிடலாம்?

## மின்மினிப்பூச்சி!



மின்மினிப்பூச்சிகள் பெரும்பாலும் உலகத்தின் அனைத்து பகுதிகளிலும் காணப்படுகின்றன.

உஷ்ணமான பிரதேசங்களில் காணப்படும் மரங்களில் இந்த வகைப் பூச்சிகள் காணப்படுகின்றன. கூட்டம் கூட்டமாக காணப்படும் இந்தப் பூச்சிகள் இதன் ஒளியை பிரகாசிக்கும்போது அழகாகக் காணப்படும்.

பெண் மின்மினிப்பூச்சிககள் அதிக ஒளியுடன் காணப்படுகிறது. இந்த வகைப் பூச்சிகள் சிலவற்றின் முட்டை மற்றும் கூட்டுப்புழுக்களும் பிரகாசிக்கிறது.

இப்பூச்சிகளின் என்சைம் மற்றும் இரசாயன மாற்றத்தினால் ஒளி உருவாகி ஒளிர்கிறது. இந்தப் பூச்சியின் உடல் முழுவதும் ஒளிராது. இப்பூச்சியின் வயிற்றின் அடிப்பகுதி நுனியில்தான் ஒளிர்கிறது. ஒளி ஒளிர்வதால் வெப்பமாகாது.

உலகத்தின் சில பகுதிகளில் உள்ள மக்கள் இந்த வகை மின்மினிப்பூச்ச'களைச் சேகரித்து வைத்துக்கொள்கின்றனர்.

## விடைகள்

### புதிர்

4 அப்பிள் பழத்தை 3 துண்டுகளாக வெட்டினால் 12 துண்டுகள். ஆளுக்கு ஒன்று கொடுக்கவேண்டும். மீதி 3 அப்பிளை 4 துண்டகளாக வெட்டி 12 துண்டுகளை ஆளுக்கு ஒன்றாக கொடுக்கவேண்டும்.

### விடுகதைகள்

1. தலையணை. 2.தவளை.
3.குதிரை. 4.கொடி.
5.விளக்கு 6.தீக்குச்சி



திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச்சந்தி

# அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ரதோற்சவ சிறப்பு மலர்




அனைத்து வகையான
மணிக்கூடுகளையும் திருத்தி
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

கென்னடி வாச் வேக்ஸ்

315B பரமேஸ்வராச் சந்தி
திருநெல்வேலி.
(C-1024)



பாடசாலை மாணவர்களுக்கு
உகந்த சப்பாத்துக்களையும் ஆண், பெண்
இருபாலாருக்குமான காலணிகளைப்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

Bata ஐங்கரன் ஆ பலஸ் DSI

315C பலாலி வீதி
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
(C-1025)



அலபம் வடிவமைத்தும் பொலிமர்சீல் தயாரித்தும் படங்களுக்கான பிறேம் போட்டும் கொடுக்கப்படும்.
kit card மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
தரமான படப்பிடிப்பிற்கு நாடுங்கள்

சன்றைஸ் ஸ்ரூடியோ
Sun Rise Studio

348, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
T.P:021-4591350
Mob:0777-294251
(C-1028)



* போட்டோபிரதி சேவை
* லமனேற்றிங் * புக்பைண்டிங்
* ஸ்பைரல் பைண்டிங் * பக்ஸ்
* கொம்பியூட்டர் பிரீண்டிங்
ஆகியவற்றுக்கு நாடுங்கள்

அபிராமி
தொலைத் தொடர்பு நிலையம்

(பல்கலைக்கழகம் முன்பாக)
இல. 212, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 021-222-2360
(C-1029)



* நெல் உடைத்தும் தீட்டியும்
* ஈர உழுந்து * ஈர அரிசி * மிளகாய்
* சிகைக்காய் * கோப்பி *தானியவகை என்பன அரைத்து கொடுக்கபபடும்.
*அத்துடன் கொப்பராவில் இருந்து எண்ணெய் தயாரிதது்க் கொடுக்கப்படும்.
*சமையல் பாத்திரங்கள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ மில்

303, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(C-1026)




ரத பவனி வரும் ஸ்ரீ வீரகத்தி
விநாயகர் அருள்வேண்டிப்
பிரார்த்திக்கிறோம்.
அனைவரும் விரும்பும் வர்ணங்களில் நகைகளை ஓடர்களுக்கு குறித்த தவணையில் செய்து வழங்கிட

திருமகள் ஜுவலிகிறாப்ட்

இல. 11A, இராமநாதன் வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
(C-1022)


24.01.2005



இவ்வாலயம் 1939ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு விநாயகப் பெருமான் இவ்வருடமே தேரில் வீதியுலா வருகிறார்.

## பிரதமகுருவின் ஆசிச்செய்தி

*விநாயகப்பெருமான் அடியார்களே!*

திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச் சந்தி திவ்விய பதியில் வீற்றிருந்து தன்னை நாடிவரும் அடியார்களுக்கெல்லாம் இன்னருள் புரிந்துவரும் விநாயகப் பெருமான் அடியார்களின் பெரும் நன் முயற்சியினால் தாரண வருஷ தைப்பூச நன்னாளை தீர்த்தோற்சவமாகக் கொண்டு 15 தினங்கள் மகோற்சவம் நடைபெறும் பெரும் பாக்கியம் கிடைக்கப்பெற்றுள□ளது.

தை 11ஆம் நாள் 24-1-2005 இன்று திங்கட்கிழமை இரதோற்சவம் நடைபெறுகிறது. தேரேறி தெரு வீதி பவனி வந்து அடியார் அனைவருக்கும் நல்லருள் பாலிக்கவேண்டி எல்லாம் வல்ல எனது குலதெய்வமாகிய கலட்டி வீரகத்தி விநாயகரையும், திருநெல்வேலி தெற்கு பரமேஸ்வராச் சந்தி வீரகத்தி விநாயகரின் பாதக்கமலங்களையும் சேவித்து எனது ஆசியை வழங்குகின்றேன்.

*லோகாசமஸ்தா சுகினோ பவந்து*

சிவஸ்ரீ.சி.ஸ்ரீதயாளக்குருக்கள்,
பிரதமகுரு
தேவஸ்தானம்.


J.K.பேப்பர், கலர் பேப்பர்,
Rotomac pen Camlin product
ஏகவிநியோகஸ்தர்கள், கல்விசார் உபகரணங்கள், அழகுசாதன, அன்பளிப்புப் பொருட்களின் விற்பனையாளர்கள்.
மற்றும் நிழற்படப்பிரதி, தொலைத்தொடர்பு சேவைகள் என்பவற்றுக்கு நாடுங்கள்

கிருபா
ரேடிங் சென்ரர்

இல. 2, பரமேஸ்வராச் சந்தி
திருநெல்வேலி.
T.P: 021-222 2104
(C-1023)



பலசரக்கு பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளவும் உள்நாட்டு, வெளிநாட்டு தொடர்புகளுக்கும் நாடுங்கள்

யோகா வணிக நிலையம்
315, palaly Road, திருநெல்வேலி.
T.P:021 - 2936

யோகா Communication
No.315, palaly Road, திருநெல்வேலி.
T.P:021 - 2106

வீடியோ ஓடியோக்களை RECORDING செய்து பெற்றிட நாடுங்கள்

LUCKY VIDEO LIBRARY
No.315A, palaly Road, திருநெல்வேலி.
T.P:021 - 3449
(C-1018)



கலர் மற்றும் கறுப்பு, வெள்ளை
வீடியோ படப்பிடிப்பு, படம் பெரிதாக்கல்,
கணனி வடிவமைப்பு, பிறேம் போடுதல்,
டியூரோ அல்பம் வடிவமைப்பு எனபவற்றுக்கு

லக்ஷன் போட்டோ & வீடியோ

மார்க்கம் பரை
கோப்பாய் வடகசு,
கோப்பாய்.
189/1பரமேஸ்வராச் சந்தி, பலாலிவீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
T.P: 0777 917703
(C-1021)



சுத்தமாகவும் சுகாதாரமாகவும்
நறுமணங்கமழும் சுவையில்
தயாரிக்கப்படும் உணவுகளை
உண்டு மகிழ்ந்திட

கண்ணன் லொட்ஜ்

இல. 06, சேர் பொன் இராமநாதன்வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.
(C-1017)



ஆண்களுக்கான ஆடைகளை
சிறந்த முறையிலும், குறித்த
தவணையிலும் தைத்துக்கொள்ள
நாடவேண்டிய இடம்

சற்றிசன் ரெயிலர்ஸ்

01.02.2005 தொடக்கம் ஆலடிச்சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி எனும் முகவரியில் இயங்கும்.

315A, பலாலி வீதி,
திருநெல்வேலி.
(C-1020)



தரமான அனைத்து வகையான
வீடியோ, ஓடியோ, MP3, D.V.D
சீடிக்களை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்

சிறி விநாயகர்
டிஜிற்றல் ட்றீம்ஸ்
Digital Media House

Head
வடக்கம்பிராய்,
பண்ணாகம், சுழிபுரம்.

Branch
303A, பலாலி வீதி,
திருநெல்வேலி.
(C-1019)



உங்கள் அனைத்து
வகையான பொருட்
தேவைகளுக்கும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்

CAFENII MUSIC
MULTI CENTURE
பல்பொருள் வாணிபம்

187/2, பரமேஸ்வராச் சந்தி,
பலாலி வீதி.
(C-1015)



தரமான வர்ணக்குழம்பு
களையும் கட்டிடப்
பொருட்களையும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

சஞ்சீவி வர்ணக்குழம்பு
கட்டிடப் பொருள் வாணிபம்

பரமேஸ்வராச் சந்தி,
பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(C-1016)

# இளமை காக்கும் சத்துணவு!



ஆரோக்கியமாக வாழ்வது மனிதனின் பிறபபுாிமை என்றாலும் அதற்கு நல்ல சத்தான உணவு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், சுத்தமான சுற்றுப்புறம், தூய்மையான காற்று, உடற்பயிற்சி மற்றும் ஓய்வு தேவை. ஆனால் இதில் முதல் அடிபபடைத்தேவை எது தெரியுமா? சத்துணவுதான்.

உடல் வளர்ச்சி, சக்தி, தேய்ந்துபோன பொருட்களைப் புதுப்பிக்கும் ஆற்றல், நோய் எதிர்ப்பு, உடலின ஒட்டுமொத்த பாதுகாப்பு ஆகியவற்றை அளிப்பது தான் சத்துணவு. எனவே அதில் அதற்குத் தேவையான எல்லாப் பொருட்களும் அடங்கி இருக்க வேண்டும்.

ஆண், பெண், குழந்தை மற்றும வயது, பருவநிலை, உழைப்பு, தட்பவெப்ப நிலைக்கு ஏற்றபடி சமச்சீா் உணவு சாப்பிடுவது நல்லது.

அதிக பணச்செலவு இல்லாமல் சத்துக்கள் நிறைந்த உடல் ஆரோக்கியம் காத்து என்றென்றும் இளமை காக்கும் உணவுகள் ஏராளமாக இருக்கின்றன.

கலப்பு தானிய உணவு சாப்பிடுவது நல்லது. அதாவது 3 வேளையும் ஒரே தானியம் சாப்பிடுவதற்குப் பதில் அரிசி, கோதுமை, பயறு போன்ற வெவ்வேறு வகையான தானியங்களைத் தினமும் சாப்பிடுவது நல்லது. 'பி' விற்றமின்கள் பயறுகளில் அதிகம் உள்ளது. ஆகவே இவற்றை அதிகம் பயன்படுத்தவேண்டும்.

பயறு வகைகளை முளை கட்டிச் சாபபிட்டால நமக்குக் கூடுதலான விற்றமின் பி,சி சத்தும கிடைக்கிறது. உணவில் உள்ள இரும்புச்சத்தும் நன்றாக கிரகிக்கப்படும். மேலும் அடுப்பில் வைத்து சமைப்பதற்கான நேரமும் எரிபொருளும் மிச்சம். எனவே இது சிக்கன உணவாகும்.

தானியமும், பயறும் ஒன்றாகச் சேர்த்துச் சாபபிட்டால் அதிலிருந்து கிடைக்கும் புரதச்சத்து, குணத்திலும், தரத்திலும் உயர்ந்ததுருகும. இடலி, பொஙகல, தோசை போன்றவைகளை இதற்க உதாரணமாகச் சொல்லலாம்.

உணவில் தினமும் கீரை இருப்பது அவசியம். ஏனென்றால் அதிலிருந்து 5வித சத்துககள் கிடைககிறது. விலையும் மற்ற காய்கறிகளைவிடக் குறைவு. மிகவும் மலிவாகக் கிடைக்ககூடிய முருங்கைக்கீரையில் மிகுந்த சததுக்கள் உள்ளன.

பல பெண்கள் பால் குடிப்பைதத் தவிா்த்து வருகிறார்கள். இது நல்லதல்ல. பால் அத்தியாவசியமான ஒன்று. பால் மற்றும் பால் பொருடகளான தயிர், மோர் போன்றவை உணவில் அவசியம் இடம் பெறவேண்டும்.

பழங்கள் சாப்பிட்டால் இளமை அழகுக்கு எழில் சேர்க்கும். குறிப்பாக பப்பாளி, கொய்யாப்பழம், வெள்ளிககாய, மாம்பழம் நெல்லிக்காய் போன்றவை மிகவும் நல்லது.

உடல் தோற்றத்தைப் பொலிவு படுத்துவதில் காய்கறிகளுக்கும் முக்கிய பங்கு உண்டு. பச்சைக் காய்கறிகளை வாரத்தில் 2 நாளாவது சாப்பிடவேண்டும். இதன் மூலம் காய்கறிகளில் உள்ள சத்துப்பொருட்கள் அழிந்து போகாமல் அபபடியே உடலோடு ஐக்கியமாகிவிடும். நோய் தடுக்கும் சக்தியாகவும் விளங்கும்.

காய்கறிகளில் உள்ள நாா்ப் பொருட்கள், மலச்சிக்கல், பெருங்குடல் கான்சா் போன்றவை வராமல் தடுக்கிறது. மேலும் பறகளை உறுதியாக வைத்துக்கொளள உதவுகிறது. இவற்றை அப்படியே நறுக்கி 'சாலட்' செய்து சாப்பிடுவது நல்லது. கரட், பீற்றூட் போன்றவற்றை அப்படியே பச்சையாகச் சாப்பிடுவது மிகவும் நல்லது.

உணவுப்பொருட்களைச் சமைப்பதிலும் கவனம் தேவை. முடிந்தவரை அதல உளள சததுப் பொருட்கள் வீணாகிப் போகாமல சமைககும் முறைகளைத் தெரிந்து வைத்திருப்பது அவசியம்.

# மகளிர் உலகம்



## அழகுக் குறிப்புகள்



***முழங்கை கருமை மறைய:-**
தொடர்ந்து கிளிசரினை கருமையுள்ள இடதில் ப,சிவர மறையும்.

***இமை முடி வளர:-**
கண் இமை முடிகள் அடர்த்தியாக வளர இரவு படுக்கும்போது இமைகளின்மேல் சிறிது விளக்கெண்ணெய் தடவி வர வேண்டும்.

***பாதம் அழகு பெற:-**
வெதுவெதுப்பான நரில் சிறிதளவு உப்பு சேர்த்து பாதங்களை அதனுள் சில நிமிடங்கள் அமிழ்த்திவைத்திருக்க பாதம் அழகு பெறும்.

***முகத்தேமல் மறைய:-**
எலுமிச்சம் பழச்சாற்றுடன் துளசி இலைச்சாற்றைச் சேர்த்துத்தடவ தேமல் மறையும்.

***பற்கள் பளிச்சிட:-**
எலுமிச்சம்பழச்சாற்றுடன் உப்பைக் கலந்து பற்களை நன்கு தேய்தது கொப்பளிதது வர பறகள் பளிசசென மாறும்.

***பித்தவெடிப்பு மாற:-**
வேப்பிலையையும், மஞ்சளையையும் சோதது அரைத்துத் தடவினால் பாதவெடிப்பு மாறும்.

***கைகள் கவர்ச்சியடைய :-**
எலுமிச்சம் பழச்சாறும் கிளிசரினும் கலந்து அதனுள் கைகளை சிறிதுநேரம் ஊற வைத்தெடுத்துச் சுத்தம் செய்ய கைகளுக்குக் கவர்ச்சி ஏற்படும்.

***முகம் மிருதுவாக:-**
தேனுடன் எலுமிச்சம் சாற்றைக் கலந்து முகததில் தேய்த்து, 15நிமிடம் கழிந்ததும் முகத்தை நன்கு தேய்த்துக் கழுவிவர முகம் மிருதுவாவதுடன் கவர்சசியும் அதிகரிக்கும்.

## சமைத்துச் சுவைப்போம்

### பேரீச்சம்பழ பற்றீஸ்

**தேவையான பொருடகள்**

| | | |
|---|---|---|
| பேரீச்சம்பழம் | - | 1/4Kg |
| கோதுமை மா | - | 1/4Kg |
| கஜு | - | 50g (கச்சானையும் பயன்படுத்தலாம்) |
| பாலாடைக்கட்டி - 75g | | |
| வெண்ணெய் | - | அளவுக்கு |
| மிளகாய்த்தூள் | - | சிறு கரண்டியளவு |
| உப்பு | - | அளவுக்கு |
| எண்ணெய் | - | அளவுக்கு |

**செய்முறை:-**

கஜுவை வறுத்துத் தூளாக்கிக்கொள்ளவும். விதை நீக்கிய பேரீச்சம்பழத்துக்குள் கஜுத் தூளை கொஞ்சம் கொஞ்சமாக வைக்கவும். பின் பாலாடைக்கட்டி, உப்பு, மிளகாய்த்தூள், வெண்ணெய் ஆகியவற்றை கோதுமை மாவுடன் சேர்த்து ரொட்டி பதத்தில் குழைத்து, சிறு சிறு உருண்டைகளாககி மெலலிய ரொட்டியாகத தட்டி ஒவ வொரு ரொட்டியின் மேலும் பேரீச்சம்பழத்தை வைத்து ரொட்டியை இரண்டாக மடித்து பிறைவடிவில் ஒட்ட வேண்டும். இவற்றைக் கொதிக்கும் எண்ணெயில் போட்டு பொன்னிறமாகப் பொரித்தெடுத்துப் பரிமாறலாம்.

## சமையல் குறிப்புகள்

♦ பீன்ஸ் நிறைய வாங்கி வாடி வதங்கி விட்டதா? கவலைப்படாதீர்கள் குளிர்ந்த நீரில் அந்தப் பீன்சைப் போட்டு வைத்திருந்து பிறகு வெளியில் எடுத்து பொரி யல் செய்து பாருங்கள். புத்தம் புது பீன்சில் செய்தது போலவே இருக்கும்.

♦ எலுமிச்சை அல்லது தோடம் பழத்தை பிழிந்து சாறு எடுப்ப தற்கு முன் பழத்தை சிறிதுநேரம் வெந்நீரில் போட்டுவைக்க வேண் டும். அதன்பின் சாறு பிழிந்தால் நிறையச் சாறு கிடைக்கும்.

♦ முட்டை ஆம்லெட் செய்யும் போது சிறிதளவு வெண்ணையை யும் முட்டையில் கலந்து நன்றா கக் கலக்கி ஆம்லெட் செய்து பாருங்கள். ருசியாக இருக்கும்.

# அதிகம் வெட்கப்படாதீர்கள்



ஆண்களை விடப் பெண்களே அதிகம வெட்கப் படுகிறார்கள் என்பது தெரிந்த விஷயம். ஆனால் இது நம் நாட்டில்தான். ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் வெடகப்பட்டுக்கொண்டு தலையைக் குனிந்துகொள்வது, முகத்தை திருப்பிக்கொண்டு மென்மையாகச் சிரிப்பது, நேருக்குநேர் பார்க்க விரும்பாமல் எங்கோ பார்த்துக் கொண்டு பேசுவது போன்ற பழக்கங்கள் எல்லாம் பெண்களிடம் அறவே கிடையாது.

எதையும் நேருக்குநேர் பேசிவிடுவார்கள். காதல் வயப்படும் பெண்கள் மட்டுமே அதிகமாக வெட்கப்படுகின்றார்கள். அதுவும்கூட அளவுக்குத் தான்.

இதனால்தான் மேற்கத்திய பெண்கள் எந்தவொரு விஷயத்திலும் துணிவுடன் காணப்படுகிறார்கள் என்பது வெளிப்படையா[illegible] உண்மை. அங்கே அலுவலக வேலைகளில் தவறு செய்யும்போது மட்டுமே பெண்கள் வெட்கப்படுகிறார்கள். அதுகூட செய்த தவறை எண்ணித்தான்.

வெட்கம் பல வழிகளில் முட்டுக்கட்டையாக இருக்கிறது. தொடர்ந்து வெட்கப்பட்டுக்கொண்டே இருந்தால் எநத வேலையையும் முழுமையான மனதுடன் செய்யமுடியாமல போய்விடும் அபாயம் இருக்கிறது.

தவிர, ஆண்களைக் கவரத் தூண்டும், தவறு செய்யத் தூண்டும் கருவியாகவும் இந்த வெட்கம் மாறிவிடுகிறது.

அலுவலக வேலை என்றாலும சரி, படிக்கும் இடஙகளிலும் சரி பெண்கள் வெட்கத்தைத் தவிர்ப்பதற்கு ஒரே வழி எந்தப் பிரச்சினை என்றாலும் அதனை நேருக்கு நேர் அணுகுவதுதான்.

நீங்கள் நேருக்குநேர் வெளிப்படையாகப் பேசும் போது அஙகே வேறு விஷயஙகளை அலசுவதற்கான நேரம வெகுகுறைவு. அலுவலக மேலதிகாரியிடம் பேசும் போதும் இதே முறையைக் கையாளவும். நீங்கள் வெட்கப்படும், கூச்சப்படும் சுபாவம் கொண்டவர்கள் என்றால் உங்களிடம் மெல்ல மெல்ல காதல், செக்ஸ் பற்றி பேசுவதற்கு சிலர் ஆயத்தமாகிவிடுகிறார்கள்.

உங்கள் வீட்டிற்கு யாராவது வந்தால்கூட நீங்கள் மூலை முடுக்கிற்குள் போய் ஒளிந்துகொளள வேணடாம். அவர்கள் முன்பாக தாராளமாக நடமாடுங்கள். மனம் விட்டுப் பேசுஙகள்.

உங்களுக்குத் தெரியாத விஷயங்களைப் பறறிப் பேசிக கவனத்தைத் திசை திருப்புவது போல் தெரிந்தால் 'சொறி, இது எனக்குப் பிடிக்காது' என்று முற்றுப்புள்ளி வைத்துவிடுங்கள்.

என்ன சகோதரிகளே!

இனி வெடகத்தைக் குறைப்பதற்கு தயாராகிவிட்டீர்களா?

# 25 நவீன தொலைத்தொடர்பு கருவிகளை பொலிஸாருக்கு இன்ரர்போல் வழங்கியது

(கொழும்பு)

மீட்புப் பணிகளுக்கு உதவியாக 25 நவீன தொலைத் தொடர்புக் கருவிகளை இன்ரர் போல் வழங்கியுள்ளது.

மட்புப் பணிகளில ஈடுபட்டிருக் கும் இலங்கைப் பொலிஸா ருக்கு சர்வதேச பொலிஸ் (இன்ரர் போல்) 25 தொலைத்தொடர் புக்கருவிகளை வழங்கியுள்ளது.

இலண்டன் மெடரோ பொலிட் டன் பொலிஸ அமைபபின் ஊடாக இந்தத தொலைத் தொடர் புக் கருவிகள் நேற்றுமுன் தினம் பொலிஸ்மா அதிபர் சந் திரா பெர்னாண்டோவிடம் கைய ளிக்கப்பட்டன.

மெட்ரா பொலிடடன் பொலிஸ் அமைபபின் இனஸ்பெகடா செரிஸ ரம்சேய், கான்ஸ்டபிள் செரிஸ் ரோடா, பிரித்தானியத் தூதர கத்தின் அதிகாரி ராபியா செலு த்ரி ஆகியோர் பொலிஸ் தலை மையகத்திலவைத்து இத் தொலைத் தொடர்புக கருவிகளை பொலிஸ் மா அதிபரிடம் வைபவரீதியா கக் கையளித்தனர்.

சுமார் ஐம்பது கிலோமீற்றர் பரப்புக்குள் ஒருவரையொருவர் தொடர்பு கொள்வதற்கான சிறந்த தொழில்நுட்பங்களுடன வடிவமைக கப்பட்டுள்ள இந்தத் தொடர்பு சானங்களையே சாவதேச பொலிஸ அமைப்பும் பயன்படுத்துகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச பொலிஸ அமைப்பு இந்தத் தொடர்பு சாதனங்களை இலங்கைப் பொலிஸாருக்கு வழங்கியமைக்கு பொலிஸ்மா அதிபர் நன்றி தெரிவித்துள் ளார்.

காணாமற்போன மற்றும் கொல்லப்பட்ட வெளிநாட்டவர் களைக் கண்டுபிடிப்பதற்கும் இன்டர்போல் உதவவேண்டும் எனவும் அவர் மேலும் அவர் களிடம் கேட்டுக்கொண்டார். (ற)

## சேவை

(துன்னாலை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளில் 51 பட்டதாரிகள் ஈடுபடுத்தப்பட் டுள்ளனர்.

நிவாரண விநியோக நட வடிக்கைகளை துரிதப்படுத்தும் நோக்குடனேயே இவ்வாறு நிய மனம் வழங்கப்பட்டுள்ளது. (ப-101)

❖ ❖ ❖

## விபரம் சேகரிப்பு

ஜனாதிபதி செயலகத்திலி ருந்து வருகைதந்த இரு அதி காரிகள் வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயல கத்தில் நிவாரணப் பணிகளை மேற்பார்வை செய்து வருகின் றனர்.

அவ் அதிகாரிகளால் கொண்டு வரப்பட்ட சமூகசேவை எஸ். எஸ்.பி-16, எ்ஸ்.எஸ்.பி-8, எஸ். எஸ்.பி- 9 படிவங்களை கிராம சேவகர்களுக்கு வழங்கியுள்ள னர்.

அத்துடன் ஒவ்வொரு கிராம அலுவலா பகுதிகளுக்கும் பொது மக்களின் பிரதிநிதிகள் அடங கிய விததத்ல் குழு அமைக் கப்படடு அவர்கள உதவியுடனே படிவங்கள் பூரணப்படுத்தப்பட வுள்ளது. (ப-101)

❖ ❖ ❖

## பட்டநிறைவுவிழா

(பொன்னாலை)

யாழ்ப்பாணம் - தேசிய கல் வியற் கல்லூரியின் மூன்றாவது அணி முகிழ்நிலை ஆசிரியர் களுக்கான பட்டநிறைவு விழா எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளி க்கிழமை நடைபெறவுள்ளது.

இப்பட்ட நிறைவு விழா சம் பந்தமாக கலந்துரையாடலொ ன்று நாளை மறுதினம் புதன் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் அனைத்து முகிழ்நிலை ஆசிரி யர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள் ளது. (க-49)

❖ ❖ ❖

## புதிய அலுவலகம் அமைப்பு

(பொன்னாலை)

சாவகச்சேரியில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவல கம ஒன்று புதிதாக நிர்மாணிக் கப்பட்டு வருகின்றது.

நீர்ப திடடத்தின் கீழ் சுமார் 45 இலட்சம் ரூபா செலவில் இக்கட்டடம் அமைக்கப்பட்டு வரு வதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

தென்மராட்சி பிரதேச சுகா தார வைத்திய அதிகாரி பிரி விற்கென அமைக்கப்பட்டு வரும் இவ் அலுவலகக் கட்டட வேலைகள் பூர்த்தியாகும் நிலை யிலுள்ளதெனவும் பெப்ரவரி மாதமளவில் திறந்த வைக் கப்படும் எனவும் தெரிவிக்கப் படுகின்றது. (க-49)

❖ ❖ ❖

# பாதிப்புற்ற தனியார் பஸ் உரிமையாளர் கவனத்துக்கு!

(கொழும்பு)

சுனாமி பேரலையினால் சேதமடைந்த தனியாா பஸ்கள் பற்றிய விபரங்களை தமக்குத் தந்துதவுமாறு தேசிய போக்கு வரத்து ஆணைக்குழு பஸ் உரி மையாளர்களிடம் கேட்டுள்ளது.

ஏற்கனவே இந்த விபரங் களை 183 பஸ் உரிமையாளர் கள் சமர்பபித்துள்ளார்கள். ஆனால அவை போதிய தகவல்களைக் கொண்டிருககவில்லையென குழு வின் கொள்கைப் பணிப்பாளர் எம்.ஏ.ஜிபரி தெரிவித்துள்ளார்.

எனவே சகல விபரங்களை யும் பஸ் உரிமையாளர்கள் தமக்கு சமர்ப்பித்தால் அவற்றை ஆராய்ந்து நியாயமானதொரு தொகையை நட்டஈடாக வழங்க முடியுமென்றும் அவர் தெரி வித்தார். (க-60)

# சட்டவிரோதமாக தறிக்கப்பட்ட சவுக்கு மரங்கள் ஏலத்தில் விற்பனை

(துன்னாலை)

சட்டவிரோதமான முறை யில தறிக்கப்பட்ட சவுக்கு மரங கள் வடமராட்சி கிழக்குப் பகுதி யிலிருந்து கொண்டுவரப்பட்ட போது பருத்தித்துறை பொலி ஸாரால் கைப்பற்றப்பட்டு பருத் தித்துறை நீதிமன்றில் பல வரு டக் கணககில் குவிககபபட்டிருந் தது.

இச்சவுக்கு மர விறகு களை நீதிமன்றத் தீர்ப்பின்படி ஏலத்தில் விற்க நிதியமைச்சில இருந்து அண்மையில் அனுமதி கிடைத்தது.

இதனையடுத்து எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 9மணிக்கு இவ் விறகுகளை விற்க நடவடிக்கை எடுககப்பட்டுள்ளது.

இதனால் நீதிமன்றில் பல வருடங்களாக இடையூறான வித த்தில் குவிக்கப்பட்ட 50 லோட் விறகுகளும் அப்புறப்படுத்தப்பட வுள்ளது.

இதேபோல் நீதிமன்றில் வரு டக்கணக்கில் காணப்பட்ட பல நூற்றுக்கணக்கான சைக்கிள் களும் கடந்த வருடம் அரச உடை மையாக்கப்பட்ட ஹனரா வாக னங்களும் நேற்று விற்கப்பட் டுள்ளது.

பருத்தித்துறை நீதிமன்றம் கடந்தகால யுத்த நடவடிக்கை யால் அழிவுற்று இடம்பெயர்ந்து வதிரி பகுதியில் தனியார் கட் டடத்தில் அண்மைக்காலமாக இயங்கி வருவது இங்கு குறிப் பிடத்தக்கது. (க-101)

# சாவ. மருத்துவமனையில் 108,000 பேர் சிகிச்சை

(மருதங்கேணி)

சாவகச்சேரி மருதங்கேணி மருத்துவமனையில் கடந்த ஆண்டு ஜனவரி முதல் டிசெம்பர் மாதம் வரையான காலப்பகுதி யில் ஒரு இலட்சம் பேருக்குமேல் பல்வேறு நோய்களுக்காக சிகி ச்சை பெற்றுள்ளதாக வைத்திய சாலை புளளிவிபரஙகள் மூலம் தெரியவந்துள்ளது.

இம் மருத்துவமனையில் ஒரு இலட்சத்து 8ஆயிரம் பேர் வெளி நோயாளர்களாகப் பதிவு செய்யப பட்டு சிகிச்சை பெற்றுச் சென்று ளளனர். 6ஆயிரத்து 486 பேர் விடு திகளில தங்கிநின்று சிகிச்சை பெற்றுள்ளனர். அத்துடன் 329 குழந்தைகள் பிறந்துள்ளது என் றும் மருத்துவமனை புள்ளிவிபர ஙகள் தெரிவிக்கின்றன. (ற-35)

# பௌத்த விகாரைகளை புனரமைக்க ஜப்பான் அரசு நிதியுதவி வழங்கும்

(கொழும்பு)

ஜபபான் கலாசார அமைச்சு, சுனாமியால் பாதிபபிறகு உளளாக் கப்பட்ட பௌத்த விகாரைகளைச் சீர்செய்வதற்காக, 5மில்லியன் ஜென்னை அன்பளிப்பாக வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

கல்வி, கலாசாரம், விளையாட்டு, விஞ்ஞனம், தொழில்நுட்பம் ஆகியவற்றிற்குப் பொறுப்பான ஜப்பானிய அமைச்சுக்களைச் சேர் ந்த 13 உறுப்பினர்கள் கொண்ட குழுவொன்று எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு வருவதற்குத் திட்டமிட்டுள்ளது.

இக்குழுவுக்கு ஷினிசிரோ ஷிடகா என்னும் பல்கலைக்கழகப் பேராசிரியர் தலைமை தாங்குகின்றார். இக்குழுவினர் காலி, மாத் தறை, அம்பாநதோட்டை ஆகிய பிரதேசஙகளுககுச சென்று அங்கு ஏற்பட்டிருக்கும் அனர்த்தங்களைப் பார்வையிட்டு, அப்பகுதி களிலுள்ள விகாரைகளைப புனரமைப்பதற்கு நிதியுதவியாக மேற்படி தொகையினை வழங்கவிருப்பதாகத் தெரிவிக்கபபடுகிறது.(ற)

# சுனாமியால் பாதிப்புற்றவர்களுக்கு கண்நோய்கள் பரவும் அபாயம்!

(சுதுமலை)

சுனாமி கடல் அலைத்தாக் கத்திற்கு உட்பட்டு முகாம்களி லும், பாடசாலைகளிலும் தங் கியுள்ள மக்களுக்கு, கண் தொடர்பான நோய்கள் பரவுவ தற்கு சாத்தியம் உள்ளதாக தெரிவித்து, சுகாதார போசாக்கு நலன்புரி அமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

பொதுவாக கண்நோய்கள் வைரசால் ஏற்படும் தொற்றுக்கள எனவும் இது பரவத்தொடங்கி னால் சடுதியாக எல்லோருக் கும் ஒரே தடவையில் ஏற்படும் எனவும் எச்சரித்துள்ளது.

மேலும் இந்நோய் ஏற்படு வதற்கு முன்னர் விழிப்பாக இருப் பதற்கு அறிவுறுத்துவது மிகவும் முக்கியம். குறிப்பாக ஒருவர் உபயோகிக்கும் துவாய், முகம் துடைக்கும் துவாய், தலை யணை என்பவற்றை மற்றவா பாவிப்பதை இயலுமானவரை தவிர்க்க வேண்டும்.

இந்நோய் கூடியது 7 நாளை க்கு ஒருவருக்கு காணப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவரு க்கு அவ்வாறு ஏற்பட்டதும் அரு கில் உள்ள வைத்தியசாலை யில் உடனடியாக சிகிச்சை பெற் றுக்கொள்வதன முக்கியத்துவத தையும் அச்சுற்றுநிருபத்தில் தெரி விக்கப்பட்டுள்ளது. (க-252)

# கிராமிய வைத்தியசாலை சு.திணைக்களத்துடன் இணைப்பு

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை தற்காலிகமாக கிளிநொச்சிப் பிராந்திய சுகா தார திணைக்களததுடன இணைக் கப்பட்டுள்ளது.

தற்போது சுனாமி கடற்பேர லையால் பாதிக்கப்பட்ட இப்பிர தேசத்தின் சுகாதார வசதிகளை உடனடியாக ஏற்படுத்தவும் குறிப் பிட்ட கிராமிய வைத்தியசாலை யாழ் பிராந்திய அலுவலகத்தில் இருந்து நீண்டதூரத்தில் இருப் பதாலுமே இத்தகைய நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டி ருக்கிறது.

என்னும் யாழ்.அலுவலகமே தேவையான மருந்துப் பொருட் களை இவ்வைத்தியசாலை க்கு அனுப்பிவருகிறது என்பது இங்க குறிப்பிடத்தக்கது. (க-35)

# வணிக வங்கிகளில் கடன் பெற்றோருக்கும் நிவாரணம்

(கொழும்பு)

வணிக வங்கிகளில் கடன்க ளைப் பெற்ற, சுனாமி அனர்த் தத்தினால் பாதிக்கப்பட்ட பிர தேச மக்களுக்கு, நிவாரணம் பெற்றுக்கொடுக்க நிதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஒவ்வொருவரும் பெற்றுள்ள கடன்களுக்கு ஏற்ற வகையில் நிவாரணங்களை பெற்றுக்கொடுப் பது தமது அமைச்சின் நோக்க மென நிதியமைச்சர் றஞ்சித் சியாம்பலாப்பிட்டிய தெரிவித் தார்.

கடன்களை முற்றாக அற விடாமல் விடுவது அல்லது கடன் களின் ஒரு பகுதி அறவிடாமல் விடுவது அல்லது வட்டியை அறவிடாமல் விடுவது போன்ற நிவாரணங்கள் பலவற்றை வழங் குவது குறித்து கவனம் செலுத் தப்படும் என்றும் அவர் தெரி வித்தார்.

வணிக வங்கித் தலைவர் கள் திறைசேரி அதிகாரிகள், ஆகியோருடன் இது தொடர் பாக பேச்சுவாத்தை நடைபெற்று வருவதாகவும் அவர் தெரிவித் தார்.

பெறப்பட்டுள்ள கடனுக்கான காரணம் மற்றும் பெறப்பட்டுள்ள கடன் தொகைகள் ஆகியவற்றுக் கேற்ப நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அனர்த்தத்தி னால் பாதிக்கப்பட்ட பிரதேசங் களில் உள்ள மக்கள் வணிக வங்கிகளில் அடைவு வைத்த பொருட்களுக்கான வட்டியை அற விட வேண்டாம் என வங்கிகளு க்கு யோசனை வழங்கியுள்ள தாக பிரதி நிதியமைச்சர் தெரி வித்தார். (க-9)

## பாதிக்கப்பட்டவர்களின் நலன்வேண்டி

# நுவரெலியா ஸ்ரீகாயத்திரி பீடத்தில் இன்று விசேட யாக பூசை இடம்பெறும்

(கண்டி)

சுனாமி பேரனர்த்தத்தில் உயி ாிழந்த சர்வ மதங்களையும் சேர் ந்த ஆத்மாக்களுக்கும் பாதிக் கப்பட்டவர்களுக்குமாக விசேட யாக பூசை பௌர்ணமி தின மான இன்று திங்கட்கிழமை காலை நுவரெலியா ஸ்ரீ காயத் திரி பீடத்தில் காயத்திரி சித் தர் முருகேசு சுவாமிகள் தலை மையில் நடைபெறும்.

அத்துடன் இன்று ஜேர்மன், அமெரிக்கா, மலேசியா, தென் ஆபிரிக்கா, இந்தியா போன்ற உலக நாடுகளில் உள்ள காய த்திரிபீட கிளை ஸ்தாபனங்க ளிலும் காயத்திரி பக்தர்களை விசேட பிரார்த்தனை, ஜெபம், யாகபூசை நடத்துமாறு முரு கேசு சுவாமிகள் வேண்டுகோள் விடுத்துளளார்.

அதன்படி ஆங்காங்கு உயிரிழந்த ஆத்மாக்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்குமாக பூசை, பிரார்த்தனை, ஜெபம், நடைபெறும்.

இதேவேளை பாரத நாட் டில விசேடமாக கொல்லிமலை அடிவாரத்தில் அமைந்துள்ள மகாசித்தர்களின் ஆசிரமத்தில் ஸ்ரீலஸ்ரீ காகபுஜண்ட தலையாட் டிச் சித்தர் பெருமானின் பிர தம சீடர் மூலிகை முனிவர் தொடர்ந்து 48 நாட்கள் விசேட மாக யாக பூசை நடத்தி வரு கிறார்.

வடநாட்டில் ஹரித்வார் சாந்திகுஞ் காயத்ரி ஆசிரமத் திலும், சென்னை அகண்ட பரிபூரண சச்சிதானந்த தபோ வனத்திலும், திருக்கோவிலூர் ஞானானந்த ஆசிரமத்திலும், ரிஹிகோஸம் திவ்விய ஜீவன சங்கம் ஆகிய ஸ்தாபனங்களி லும விஷேட பிரார்த்தனை ஜெபம, பூசை செய்யும் படி சுவாமிகள் வேண்டுகோள் விடுத் துள்ளார்.

(க-9)

# அதிபர் புஷ்ஷை சாத்தானாக நினைத்தே மினாவில் தூண் மீது கல் எறிந்தோம்

## ஹஜ்.யாத்திரிகர்கள் தெரிவிப்பு

(சவூதி அரேபியா)

மினாவில் சாத்தான்மீது கல் எறியும் நிகழ்ச்சி எவ்வித அசம்பாவிதங்களும் இன்றி அமைதியாக நிறைவடைந்தது. ஆனால் இந்தக் கல் எறிதல் நிகழ்ச்சியை அமெரிக்க அதிபர் புஷ் உட்பட சில உலகத் தலைவர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட நிகழ்ச்சியாகவே கருதியதாக அதில் பங்கேற்றவர்கள் தெரிவித்துள்ளனர்.

இஸ்லாமியர்களின் ஐந்து கடமைகளில் ஒன்று ஹஜ் புனித பயணம். கடந்த ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டும் இலட்சககணககானோர் புனித பயணத்தை மேற்கொண்டனர். பயணத்தின் இறுதி நிகழ்வாக சாத்தான் மீது கல் எறியும் நிகழ்ச்சி கடந்த வெள்ளியன்று நடந்தது. சவூதி அரேபியாவில் மினாவில் உள்ள சாத்தான் தூண் மீது ஹஜ் பயணம் மேற்கொண்டவர்கள் பலரும் கல் எறிந்தனர்.

அவ்வாறு கல்லெறிந்த பலர் கூறுகையில்,

சாத்தான் மீது கல் எறியும் நிகழ்ச்சியின் போது எங்களுக்கு அமெரிக்க அதிபர் புஷ், இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன், பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் உட்பட உலகத் தலைவர்களே ஞாபகத்திற்கு வந்தனர்.

காரணம், இவர்கள் அனைவரும இஸ்லாமியர்களுக்கும், இஸ்லாமிய நாடுகளுக்கும் எதிராகச் செயல்பட்டு வருகின்றனர். எங்களது கோப உணர்ச்சியை நேரடியாக நாங்கள் காட்ட இயலாது என்பதால, சாத்தான்களாக அவர்களை நினைத்து கல் எறிந்தோம் என்றனர்.

ஒவ்வொரு ஆண்டும் இந்தக் கல் எறியும் நிகழ்ச்சியின்போது ஏற்படும் நெரிசலால் உயிரிழப்புக்கள் ஏறபடுவது வழக்கம்.

கடந்த ஆண்டு இந்நிகழ்சசியின் போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 250பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஆனால் இந்த ஆண்டு எந்த அசம்பாவித சம்பவங்களும் இல்லாமல் அமைதியாக நிகழ்ச்சி நடைபெற்றது. (ற)

## 25 நாட்களுக்குப் பின்னா மீட்பு

சுனாமி காரணமாக சிறு தீவு ஒன்றுக்குள் புகுந்த பழங்குடி இனத்தவர் ஒருவர் 25 நாட்களுக்குப் பிறகு மீட்கப்பட்டுள்ளார்.

உணவுக்கு வேறு எதுவும் கிடைககாததால் தேங்காயை மட்டுமே உட்கொண்டு இவர் காலம் தள்ளியுள்ளார். அவரது வயதைத் தீர்மானிக்கமுடியவில்லை. அவரது பெயர் மைக்கேல் மங்கல் என்பதாகும்.

கடற்படையுடன் சேர்ந்து நிக்கோபார் தீவைச் சேர்ந்த 4 பேர், வெறிச்சோடிக்கிடந்த பில்லோ பஞ்சா தீவில் தேடுதல் வேட்டை நடத்தினர். அப்போது, தீவின் கரையில் கை அசைத்தபடி இருந்த இந்த நபரைக் கண்டு அவரை மீட்டுள்ளனர். (ற)



அமெரிக்காவைச் சேர்ந்த கிறிஸ்துவ மதபோதகர் பென்னி ஹின்னின் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நடாத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது காரொன்று தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளதைப் படத்தில் காண்க.

## விமானம் வீழ்ந்தது 5 பயணிகள் பலி

அமெரிக்காவில் கன்ஸாஸ் மாகாணத்தில் பயணிகள் விமானம ஒனறு கடந்த வெள்ளிக்கிழமை குடியிருப்புப் பகுதியில் விழுந்து நொருஙகியுள்ளது. இதில், விமானத்தில் இருந்த 5 பயணிகள் உயிரிழந்தனர்.

5பயணிகளை ஏற்றிக்கொண்டு புறபபட்ட இவ்விமானம், சிறிதுநேரத்திலேயே கீழே விழுந்தது. அந்த இடததில் இருந்த விளக்குக் கம்பத்தையும் பல மரங்களையும் சேதப்படுத்திய விமானம், வீடு ஒன்றின் மீது மோதி நின்றது. வீட்டின பெரும்பகுதி இடிந்துவிட்டது.

விமானம் சென்ற வழியில் இருந்த 2 வாகனங்களும் சேத மடைந்தன. எனினும் குடியிருப்பு பகுதியில் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது. (ற)



இஸ்லாமியர்களின் புனித தினமாக பக்ரீட் பண்டிகையையொட்டி டில்லியில் உள்ள மிகப்பெரிய மசூதியான ஜம்மா மசூதியில் ஆயிரக்கணக்கான இஸ்லாமியர்கள் தொழுகையில் ஈடுபட்டனர்.

# ஈராக் தீவிரவாதிகளால் பிடிக்கப்பட்ட சீனர்கள் எட்டு பேரும் விடுதலை

(பீஜிங்)

ஈராக்கில் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட சீனர்கள் எட்டுபேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நல்லெண்ண அடிப்படையில் அவர்களை விடுவித்ததாக தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

ஈராக்கில் உள்ள தீவிரவாத அமைப்பு அல்- நுமான். இந்த அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் கடந்த வாரம் எட்டு சீனர்களை பணயக் கைதிகளாக சிறைபிடித்தனர். ஜோர்டான நாட்டிற்குப் போகும் பாதையில் சென்றுகொண்டிருந்த சீனர்களை தீவிரவாதிகள் பிடித்தனர். சீனர்கள் ஈராக்கில் நுழையத் தடைவிதிக்க வேண்டும் என்றும் சீன அரசை இவர்கள் கேட்டுக்கொண்டனர். இந்நிலையில் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்ட எட்டு சீனர்களையும தீவிரவாதிகள் நேற்று முன்தினம் விடுவித்துள்ளனர்.

நல்லெண்ண அடிப்படையில் இதைச் செய்வதாகவும் அந்தத் தீவிரவாதிகள் கூறியுள்ளனர். இச்செய்தியை அல் - அரேபியா தொலைக்காட்சி ஒளிபரப்பியுள்ளது. ஈராக்கில் உள்ள சீன தூதரகமும் தங்கள நாட்டவர்கள் விடுவிக்கப்பட்டதை உறுதி செய்துள்ளது. (ற)

# அந்தமானிலுள்ள 209 குடும்பங்களை தத்தெடுக்கவுள்ளது பஞ்சாப் அரசு

(பஞ்சாப்)

சனாமியால் கடுமையாக பாதிக்கப்பட்ட அந்தமானின் கேம்பெல் பே தீவைச் சேர்ந்த 209 குடும்பங்களை தத்தெடுப்பதாக பஞ்சாப் முதல்வர் கப்டன் அமரீந்தர் சிங் தெரிவித்தார்.

கடுமையாகப் பாதிக்கப்பட்ட அந்தமான், நிகோபார் தீவுகளை நேற்றுமுன்தினம் நேரில் பார்வையிட்ட பின், நிருபர்களிடம் அமரீந்தர் சிங் கூறியதாவது,

கேம்பெல் பே தீவில் உள்ள 209 முன்னாள் இராணுவ வீரர்கள் குடும்பத்தினருக்கும் உடனடி நிவாரணமாக தலா ஒருலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

தமது வாழ்க்கையை அவர்கள் மீண்டும் தொடங்குவதற்காக இது வழங்கப்படுகிறது. பஞ்சாப், கேரளம, தமிழ்நாடு, மகாராஷ்டிரம், ஒரிசா ஆகிய மாநிலங்களிலிருந்து 1960 களில் இங்கு வந்தவர்கள் இவர்கள். தேசநலனுக்காக வந்த இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளமை மனதை கசக்கிப் பிழிவதாக உள்ளது.

பாதிக்கப்பட்ட இக்குடும்பத்தினரின் குழந்தைகளின் கல்விக்காக கேம்பெல் பே கல்வி நிவாரண நிதியை பஞ்சாப் அரசு தொடங்கும. முதல்கட்டமாக அந்நிதிக்கு ரூபா 2கோடி அளிக்கப்படும்.

சுனாமியால் ஹட் பே, கட்சல், கமோர்தா, கார் நிக்கோபார், கேம்பெல பே ஆகிய பகுதிகளில் சேதமடைந்த பாடசாலைக் கட்டடங்களைச் சரமைக்க பஞ்சாப் அரசு நிதி அளிக்கும்

இதைத்தவிர பஞ்சாபில் உள்ள பள்ளியில் படிக்க விரும்பும மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை அளிக்கப்படும்.

மேலும் பஞ்சாபி மொழியைக் கற்கவேண்டும் என்ற நிபந்தனையிலிருந்து விலக்கும் அளிக்கப்படும் என்றார் அமரீந்தர் சிங்.

முதல்கட்ட நிவாரண உதவிகளை அளிப்பதற்காக பஞ்சாப் அரசு அதிகாரிகள் எதிர்வரும் புதன் கிழமை அங்கு செல்லவுள்ளனர்.

மிகவும் பாதிக்கப்பட்ட அந்தமான், நிக்கோபார் தீவுகளைச் சேர்ந்தோரை தத்தெடுக்கும் முதல் மாநிலம் பஞ்சாப் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## பக்தாத்தில் குண்டுவெடிப்பு 12 பேர் பலி; 25 பேர் காயம்

(பக்தாத்)

ஈராக் தலைநகர் பக்தாத் அருகே ஷியா முஸ்லிம் பிரிவினரின திருமண விருந்தில் கடந்த வெள்ளிக் கிழமை நடத்தப்பட்ட தற்கொலைப் படைத் தாக்குதலில் 4 குழந்தைகள் உட்பட 12 பேர் கொல்லப் பட்டனர்.

இச்சம்பவம் பக்தாத்துக்குத் தெற்கேயுள்ள யுசிபியா கிராமத்தில் இடம்பெற்றது. இதில் 25 பேர் காயமடைந்ததாக கிராமத் தலைவர் தெரிவித்தார்.

குண்டுகள் நிறைந்த அம்புலன்ஸ வாகனத்தை விருந்து நடைபெற்ற இடத்துக்கு ஓட்டிவந்த ஒருவர் வாகனத்தில் இருந்த குண்டுகளை வெடிக்கச் செய்தார் என்று பொலிசார் தெரிவித்தனர். (ற)

# ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர இடம் கோருகிறது ஜப்பான்

(டோக்கியோ)

ஐ.நா.பாதுகாப்புக் கவுன்சிலில் நிரந்தர இடம் கோருகிறது ஜப்பான்.

ஐ.நாவுக்கு இதுவரை ஜப்பான் அளித்துள்ள பங்களிப்பே நிரந்தர இடம் அளிப்பதற்கான தகுதியாகும்.

ஜப்பான் நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் 150வது நாளான கடந்த வெள்ளிக்கிழமை உரையாற்றிய பிரதமர் ஜூனிசிரோ கொய்சுமி இதை அறிவித்தார்.

சர்வதேச அளவில் ஜப்பானின் பங்களிப்பையே இதற்கான தகுதியாகக கொள்ளலாம். இதற்காக சர்வதேச நாடுகளின் ஆதரவைத் திரட்டும் பணியில் ஜப்பான் தீவிரமாக ஈடுபடும் என்றும் அவர் கூறினார்.

விரிவுபடுத்தப்படும் ஐ.நா பாதுகாப்புக் கவுன்சிலில் நிரந்தர இடம் அளிக்கவேண்டும் என்று இந்தியா, பிரேசில்,ஜேர்மனி ஆகிய நாடுகளும் கோரிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)



கர்நாடக மாநிலம் மைசூரில் கரஞ்சி ஏரி இயற்கை பூங்காவில் பெலிகான் பறவை ஒன்று மரத்தின்மீது அமர்ந்துள்ள அழகிய காட்சி. பறவைகளின் வருகைக்காக, இயற்கை பூங்காவைச் சுற்றிலும் உள்ள பகுதிகளை கர்நாடக அரசு மேம்படுத்தியுள்ளது.

# உமாபாரதிக்கு நெஞ்சுவலி; மருத்துவமனையில் அனுமதி

(புதுடில்லி)

பீகாரில் தேர்தல் பிரசாரம் செய்ய விருந்த நிலையில் நெஞ்சுவலி காரணமாக பா.ஜ.க. மூத்த தலைவர் உமாபாரதி நேற்று முன்தினம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரது இரத்த அழுத்தம் உயர்ந்ததாலும், நெஞ்சுவலி ஏற்பட்டதாலும் தனியார் மருத்துவமனையில் இவர் சேர்க்கப்பட்டுள்ளதாக உமாபாரதிக்கு நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

அவருக்கு இதயக்கோளாறு இருக்குமா? என்று மருத்துவர்கள் சந்தேகிக்கின்றனர். 72 மணி நேரங்களுக்கு மருத்துவமனையிலேயே இருக்குமாறு உமாபாரதி அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

தற்போது அவரது உடல்நிலை சீராக உள்ளது. தொடர்ந்து பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ற)

# இலங்கையில் பெண் அடிமைத்தனம்

## I இந்துக்களிடையே!

## II தேசவழமைச் சட்டத்தில்!

## உண்டா?

**ச.சிவரூபன்**
சட்டத்தரணி
சுன்னாகம்.

**பெ**ண் அடிமைத்தனம், ஆணாதிக்கம் என்று பெண்கள் அமைப்புக்கள் எல்லாம் கூச்சலிட்டாலும் அவை உண்மையா? சட்ட ரீதியோ அல்லது சமூக வழக்கிலோ இலங்கையில் இந்துக்களிடையிலோ அல்லது தேசவழமைச் சடடத்திலோ இதற்கு இடம் உண்டா என்பது ஆய்வுக்குரியது.

இலங்கையில் இந்துக்கள் கூடுதலாக வாழும் வடக்கு-கிழக்கு மாகாணத்தையும் மலையகத்தையும் கூறலாம். இங்கு பெண் அடிமை உள்ளதா? என்பதற்கு இல்லை என்றே கூறவேண்டும். பெண்கள் உயர் கல்வி கற்கிறார்கள். உயர் பதவி வகிக்கிறார்கள் மற்றும் வீடுகளில் மனைவிமாருக்குப் பயநது வாழும் கணவர்களும் பலர். தொலைக்காட்சி நாடகங்களில் மூழ்கியிருந்தும், பெண்கள் அமைப்புகள் என்று கூறி வீட்டில் செய்ய வேணடிய கடமைகளைச் செய்யாது நேரத்தைக்கழித்து ஆடம்பர வாழ்க்கை நடாத்துவோரும் உண்டு. உண்மையில் கணவனும் மனைவியும் புரிந்துணர்வோடு பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறி வாழ்க்கையில் விரிசல் ஏற்படாது வாழ்வதே சிறந்தது.

பெண் பிள்ளைகளுக்குத் தாய்மார் தோழி போன்று இருக்கவேண்டும். பருவமடையும் போது அதன் தார்ப்பரியங்களையும், ஆண்களுடன் நெருக்கமாக நட்பு கொள்வதால் ஏற்படும் தீமைகளையும் இரகசியமாகவும், தனிப்பட்ட முறையில் வெளிப்படையாகவும் எடுத்துச் சொல்லவேண்டும். இதனால் பெண்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கலாம். ஆனால் எமது தாய்மார் அவ்வாறு செய்வதில்லை. பின்னர் காதல், திருமணமாகமுன் கர்ப்பம் என அவலப்படும் போது ஆண்களில் குறை சொல்வதில் அர்த்தமில்லை. கூடுதலாக காதல் வயப்பட்ட பெண்கள் திருமணம் முடிப்பதாகக் கூறப்படும் ஆசைவார்த்தைகளை நம்பி தமது கன்னித்தன்மையை இழக்கிறார்கள. சரியான உடைகளை ஆபாசம் இன்றி உடுத்தி பெற்றோர் பார்க்கும் திருமணத்தை ஏற்று வாழ்ந்தால் இச் சீர்கேடு வருமா? பெற்றோர் பார்க்கும் திருமணம் என்றால அது பெண் தனக்குப் பிடித்த, பெற்றோர் பார்க்கும் திருமணத்தையே கூறுகிறேன். வலுக்கட்டாய திருமணம் அல்ல. வறுமை காரணமாக பணக்கார மாப்பிள்ளைக்கு ஆசைப்பட்டு காதலிப்பது தவறு என்பதை பெண்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

ஓர் இளம் பெண் வயது போன தாத்தாவை காதல் திருமணம் செய்வாரா? அல்லது ஒரு இளம் ஆண் வயதுபோன பாட்டியை காதல் திருமணம் செய்வாரா? இல்லை. எனவே காதல் இதயம், இதயம் சந்திப்பது என்பது எல்லாம் போலி. ஒரு இளவயதில் உடற்கவர்ச்சியால் வருவது தான் காதல். இதனை யாரும் மறுக்க முடியாது. இது பின்னர் கன்னிகழிதலில் முடிவடைகின்றது. திருமணம் நடப்பது குறைவு. பாதிக்கப்படுவது பெண. ஏனெனில் குழந்தை பெறும் உடற்கூறு பெண்ணுக்கு மட்டுமே படைக்கப்பட்டுள்ளது. காதல் காமமாக மாறும் போது பெண் அதன் வயப்பட்டுத் தன்னை இழக்கிறாள். ஆனால் ஆண் மட்டும் தான் இன்பம் காண்கிறான் என்பது பொய். ஆனால் மேலுள்ள காரணத்தால் பின்னர் பாதிக்கப்படுவது பெண் ஆகும்.

எந்த ஒரு பெண்ணும் தன்னை காதலித்த அல்லது கன்னிகழித்த ஆணைத் திருமணம் செய்யுமாறு நீதிமன்றத்தில் சட்டப்படி கோர முடியாது. அது உலக நியதி, ஏனெனில் திருமணம் என்பது வாழ்க்கை. ஆயுள் முழுவதற்கும் உரியது. அவ்வாறு கட்டாயப்படுத்துவது அடிப்படை உரிமையை மீறும செயலாகும். ஆனால் காதல் கடிதங்களில் தன்னை திருமணம் செய்வதாக கூறிய வாக்குறுதியில் மீறல் அல்லது அவ்வாறான வாக்குறுதியைக் கூறும் போது ஒலி, ஒளி நாடாவில் பதிவு செய்திருந்தால் அவற்றை சாட்சியங்களாக வைத்து நட்டஈடு மட்டுமே கோரமுடியும். இது உலகநாடுகள் அனைத்திலும் உள்ள சட்டம் ஆகும். அத்துடன் அவ்வாக்குறுதியால் திருமணமாகுமுன் குழந்தை பிறந்தால் அக் குழந்தையின் இரத்த மாதிரியையும், அப்பெண் தந்தை எனக் கூறும் ஆணின் இரத்த மாதிரியையும் எடுத்து மரபணு பரிசோதனை **(D.N.A. Test)** மூலம் தந்தைமையை நீதிமன்றில் நிரூபித்து பிள்ளைக்குத் தந்தையார் என்பதை வெளிப்படுத்தி, பிள்ளைக்கு தாபரியமும், தந்தையின் சொததில் பிள்ளைக்கு வழியுரிமையும் கோரமுடியும்.ஆனால் பெண்ணை வேறு யாராவது மனம் வந்து திருமண செய்தால்தான் வாழ்க்கை அல்லது அதே ஆண் மனம் திருந்தி அவளை திருமணம் செய்தால் தான் வாழ்க்கை என ஒரு சாரார் கருதுவர். மறுசாரார் அவளின் ஒழுக்கத்தை கீழ்தரமாகக் கதைப்பர். ஏனெனில் எமது சமுதாயம் அப்படித்தான். ஆனால் அந்தப் பிள்ளையை வளர்த்து ஆளாக்கி சமுதாயத்தில் தலை நிமிர்ந்து வாழ்ந்தால் தான் அவள் பெண் எனலாம். ஆனால் சிலர் மனமுடைந்து தற்கொலை செய்வது கோழைத்தனம் ஆகும். அதற்காக வாவது பெண்கள் தமது ஒழுக்கத்தைப் பேணி தனது விருப்டிபப்படி பெற்றோரால் நிசசயிக்கப்படும். திருமணத்தை ஏற்று வாழ்தல் சிறந்தது எனலாம். யாராவது ஆண் காதலிப்பதாகக் கூறினால் அப்பெண் தனது பெற்றோரிடம் போய் கதைத்து சம்மதம் பெற்றுத் திருமணம் செய்யுமாறு உடனடியாக அவளிடம் கூறவேண்டும்.

அவனுடன் சுற்றித்திரிதல், கதைத்தல் கூடாது. இது உரிமை பறிப்பு அல்ல பாதுகாப்பு என்பதற்குத்தான். பெற்றோர் பார்க்கும் திருமணத்தால் கவணன், மனைவிக்கிடையில் விவாகரத்து ஏற்படாது என்று இல்லை. ஏற்பட்டாலும் பெற்றோர் மீது பழிபோட்டு அவர்களின் ஆதரவுடன் வாழலாம். காதல் எல்லாம் திருமணத்தில் முடிவடைவதில்லை. விவாகரத்து இன்றி வாழ்ந்ததுமில்லை.

பெண்கள் சின்னச்சின்ன விடயங்களுக்கு எல்லாம் கவணனுடன் சண்டையிட்டு, அது பெரிதாகி விவாகரத்து வரைக்கும் செல்கிறது. ஒரு குடும்பம் எவ்வாறு அமைகக்கப்படவேண்டும் என்பதைத் தீர்மானிப்பவள் பெண் என்பதை மனதில் கொள்ளவேண்டும். இதனால் தான் ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே எனக் கூறப்பட்டது. குடும்பங்களில் சண்டை சஞ்சரவு தோன்ற பெண்களும் காரணகர்த்தாக்களாக இருக்கின்றனர். (உ- ம்) மாமி, மருமகள் சண்டை. இது போல் ஆண்களுக்கிடையில் இடம்பெறுவதில்லை. அதற்காக ஆண்கள் மட்டும் உத்தமர்கள் என்றில்லை. ஆனால் அந்த ஆணை உத்தமனாக்க ஒரு பெண்ணால் நிச்சயமாக முடியும். அடுத்ததாக சீதனக் கொடுமை என்கிறார்கள். இது சட்டப்படி உண்மையா என ஆராய்வோம். ஒரு பெண்ணுக்கு கணவனைப் பிடிக்காவிட்டால் இலங்கையில் முன்னர் I ஊணிலும உறக்கத்திலும் 7 வருடங்கள் கணவனும், மனைவியும் தொடர்ச்சியாகப் பிரிந்து இருத்தல், II நீதிமன்ற அனுமதி பெற்று 2 வருடங்கள் தொடர்ந்து பிரிந்திருந்தால் விவாகரத்து வழங்கப்பட்டது. தற்போது இதனுடன் திருமணக் குற்றங்களான **(Matrimonial Fault)** சோரம் **(Adultry)** வன்ம உறவறுப்பு **(Malicious) (Desertion)** மலட்டுத்தன்மை என்பவற்றில் ஒன்றையேனும் கட்டாயம் சேர்த்துக் காட்டுதல் வேண்டும்.

சோரம் என்றால் கணவன் அல்லது மனைவி அவர்கள் தவிர்ந்த வேறுநபருடன் திருமணத் தொடர்பு வைத்திருத்தல் வன்ம உறவறுப்பு என்றால் திருமண இல்லத்தை விட்டு கணவன் அல்லது மனைவி வன்மமாக வெளியேறுதல் மலட்டுத்தன்மை அதாவது குழந்தைப்பேறு இன்மை என்பவற்றில் ஒன்றைக் காரணம் காட்டி நிரூபிக்கவேண்டும். இங்கு நீதிமன்றத்திற்குக் குற்றமற்ற வாழ்க்கைத்துணையே விவாகரத்துக் கோரி வழக்கிட் முடியும் எனவே பெண் குற்றமற்றவளாக இருந்தால் விவாகரத்துப் பெற்றுத் தனித்து வாழ முடியும் அல்லது மீண்டும் விவாகரத்தின் பின் வேறு திருமணம் செய்யலாம் இவற்றை எமது சமுதாயம் அங்கீகரிக்குமா? விவாகரத்துத்துப் பெற்ற பெண்ணைப் பற்றி இன்னொரு பெண்தான் உண்மையில் தப்பாகக் கதைக்கிறார்கள் என்றால் இந்த கசப்பான உண்மையை ஏற்பீர்களா? கதைகட்டித் திரிவதும் கூடுதலாகப் பெண்களே. எனவே பெண்ணைப் பற்றி இன்னொரு பெண் தப்பாக கதைப்பதை முதலில் நிறுத்தவேண்டும். முடியுமா? முடிந்தால் சமுதாயம் தப்பாகக் கதைக்கும் என்ற பேச்சிற்கே இடமில்லை. ஏனெனில் சமுதாயத்தை தோற்றுவித்தவளே பெண் தான். அதை வாழவைப்பதும் பெண் தான். விதவையை முன்னர் வெள்ளை சோலை உடுக்குமாறு வற்புறுத்தியதும் பெண்தான்.

கணவன் குடித்துவிட்டு அடிப்பதாக, துன்புறுத்துவதாகக் கூறுகிறார்கள். குடிப்பது, அடிப்பது, வேறு பெண்களுடன் கூட்டு வைப்பது எல்லாம் மனைவியின் நடத்தை, செயல்களால் தான் என்பது அடிப்படை ஆகும். குடிகாரனை கட்டி பின்னர் அவனைத் திருத்தி வாழவைத்த பெண்களும் உண்டு என்பதே உண்மையாகும். கணவனுக்குரிய சுகத்தைக் கொடுத்தால் அவன் ஏன் வேறு பெண்ணை நாடுகிறான்? எனவே இந்துக்கள் நவீன வெளிநாட்டு பாணியிலான வாழ்க்கை முறையை மாற்றி ஓரளவு பழைய இந்து கலாசாரத்தைப் பேணுதலே சிறந்ததாகும். இதற்கு பெண்களே வழிகாட்டியாக மாற வேண்டும். ஒரு ஆணுக்கு வக்கிரக் குணம் வந்து ஒரு பெண்ணை பாலியல் வல்லுறவு புரிகின்றான் என்றால் அதற்கு பெண்கள் தற்போது அணியும் ஆடைகளும் காரணம் தான் என்பதனை மறந்து விடக்கூடாது. தற்போது பாலியல் வல்லுறவு குற்றங்களில் மனைவியைக் கூட கணவன் பலாத்காரப்படுத்த முடியாது சட்டம் தடை செயதுள்ளது. இதற்கு எமது குற்றவியல் சட்டம் உதாரணமாகும். இதற்கெதிராக வழக்கிடலாம். மனைவியைக் கணவன் கைவிட்டால் அவள் வருமானம் இல்லாவிட்டால் தனக்கும், பிள்ளைகளுக்கும் தாபரிப்பு **(Main tanance)** வழக்கைத் தாக்கல் செய்யலாம். இது நீதவான் நீதிமன்றில் செய்ய வேண்டும் **(Magistrate Court)**

தேசவழமைச் சட்டத்தில் பெண அடிமைத்தனம் உண்டா? என்பதற்கு பின்வருனவற்றைக் கொண்டு தீர்மானிக்கலாம். சீதனக் கொடுமை என்கிறார்கள். தேசவழமைச் சட்டத்தின் கீழ் தான் சீதனம் பிறந்தது. எனினும் சீதனம் பணமாகவோ, சொத்தாகவோ பெண்ணின் பெயரில் தான் உறுதி எழுதப்படுகின்றது. அது கணவனின் பெயரில் சட்டப்படி எழுதமுடியாது. அச்சொத்துக்கள் மனைவிக்கும் அவரின் பின் அவரது பிள்ளைகளுக்கும் பிள்ளைகள் இல்லாவிட்டால் அவரது தாய், தகப்பன் அவர்களும் இல்லாவிட்டால் சகோதரங்கள் என அவரது வழியுரித்தாளரையே சென்றடையும் எனத் தேசவழமைச் சட்டம் கூறுகிறது. எனவே சீதனம் கணவனுக்கல்ல என்பதே வெளிப்படை ஆகும். அத்துடன், விவாகரத்து என்று வந்துவிட்டால் மனைவிக்கு மட்டும் செலவழித்தமைக்கு கணக்குக் காட்டிவிட்டு மிகுதியை மனைவியிடமே திரும்பக் கணவன் ஒப்படைக்கவேண்டும் என்பதே தேசவழமைச் சட்டமாகும். தாலியும், நகைகளும் பெண்ணுக்கு வழங்கப்படும் அன்பளிப்பு அதனை திருப்பி கணவன் கேட்க முடியாது.

எனவே சொத்தும், பணமும் சீதனமாக வழங்கப்படின் அது மனைவிக்கு மட்டுமே உரியது என்பது தேசவழமைச் சட்டமாகும். **Donation** வழங்குவது தேசவழமையைச் சட்டத்திற்கு முரணானது சட்டப்படி குற்றம் ஆகும்.

அத்துடன், அசையாத ஆதனங்களை மனைவி தன்னுடையதை உறுதி மூலம் கைமாற்ற கணவனின் ஒப்பமும் தேவை என்பது இது கணவனுக்கு உள்ள உரிமை ஏனெனில் மனைவி தனது சொத்தை ஊதாரித்தனமாகச் செலவழித்தால் பின்னர் விவாகரத்து என்று வரும் போது கணவன் அவற்றுக்கு என்ன நடந்தது எனப் பதில் சொல்ல முடியாது திண்டாடவேண்டி வரும். ஏனெனில் விவாகரத்தின் போது மனைவியின் சொத்துக்கள் செலவழித்த கணக்குக்.காட்டவேண்டி ஏற்படலாம். ஆனால் மனைவி, கணவன் சம்மதம் வழங்காதவிடத்து மாவட்ட நீதிமன்றத்தில் **(District Court)** வழக்கு வைத்து குறித்த தனது தனிப்பட்ட ஆதனங்களான சீதனம், நன்கொடை, திருமணத்தின் முன் விலைக்கு வாங்கியவை என்பவற்றை விற்பதற்கு அல்லது கைமாற்றுவதற்கு அனுமதி பெற முடியும். சிலர் தமது குடும்பம் சீர் குலைந்துவிடும் என்பதற்காக இவ்வாறு செய்வதில்லை எதற்கும் தயார் என்றால் தேசவழமைச் சட்டமும் பெண்ணுக்கே ஆதரவாக உள்ளது எனலாம்.

அத்துடன் திருணத்தின் பின் கணவன், மனைவி சேர்ந்து உழைத்த சொத்துக்கள், இலாபங்கள், தேடிய தேட்டம் என தேசவழமைச் சட்டம் கூறி அதில் இருவருக்கும் சமபங்கை வழங்குகிறது. இங்கு மனைவி தொழில் செய்து சம்பாதிக்காவிட்டாலும் கணவனின் சம்பாத்தியத்தில் சமபங்கைப் பெறக் கூடியதாகவுள்ளது.

அத்துடன் மாணிக்கவாசகர் எதிர் கந்தசாமி (1986) வழக்கின் தீர்ப்புப்படி ஒருவரின் இறப்பின் பின் உயிர்வாழும் வாழ்க்கைத் துணைக்கு அரைப் பங்கல்ல, முக்கால்பங்கு தேடிய தேட்ட ஆதனத்தில் உரியது எனத் தீர்க்கப்பட்டது. இது உரியது எனத் தீர்க்கப்பட்டது. இது பெண் விதவையானால் பிள்ளைகளும் இல்லாவிட்டால் தேடியு தேட்ட ஆதனத்தில் பிள்ளைகளும் இல்லாவிட்டால் தேடிய தேட்ட ஆதனத்தல் முக்காற் பங்கைப் பெறக கூடியதாக இருக்கிறது. இது ஏனைய மக்களுக்கு பொருந்தாது. ஏனெனில் ஏனைய சட்டங்களில் அவரவர் சொத்துமட்டும் அவரவருக்குரியது என்கிறது. உழைப்பும் அப்படியே. ஆனால் தேசவழமைச்சட்டம் பெண்ணுக்கு அவள் விதவையானால் கூடிய சொத்துரிமையை வழங்குகிறது எனலாம். எனவே ஆணிலும் பார்க்க பெண்ணுக்கே கூடிய உரிமைகள் உண்டு. இதற்கு இந்து சமயமும் தேசவழமைச் சட்டமும் அத்துடன் சட்டத்தில் பெண்ணுக்கு கூடிய உரிமையையும் பாதிக்கப்பட்டால் நீதிமன்றில் கூடிய நிவாரணத்தையும் தேசவழமைச் சட்டமே வழங்குகிறது எனலாம். தேசவழமைச்சட்டம் யாழ்ப்பாண மாகாண தமிழர்களுக்கே உரியது என்பதில் பெண்களே உண்மையில் பெருமை கொள்ளவேண்டும். வெளிநாட்டாரும் சிங்களவரும் எமது சட்டத்தை தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர்.

அத்துடன், மலையக இந்துக்கள் தமிழர்கள் அவர்கள் தோட்ட முதலாளிகளாலும், அரசியல் வாதிகளாலும் நசுக்கப்படுகிறார்களே தவிர ஆங்கும் பெண் அடிமைத்தனம் இல்லை. ஆணாதிக்கம் என்றால் வாழத்தெரிந்த பெண் திருமணம் செய்யாமலும் வாழலாம். இதற்கும் பெண்ணுக்கு சட்ட உரிமை உண்டு. சட்டம், நீதி உண்டு என்றால் பெண் எதற்கும் பயப்படத் தேவையில்லை ஏனெனில் நீதியே முதன்மையானது ஆகும். இது சட்டம் மூலமாக கிடைக்கிறது என்றால் நமது பெண்கள் பெருமைப்படத்தான் வேண்டும். ஆனால் பெண்கள் வேலைக்குச் செல்வதால் அவர்களது பிள்ளைகள் கவனிப்பின்றி ஒழுக்கக்கேடாக நடப்பதற்கும் வழிகோலுகிறது எனலாம். எனவே இந்து மதத்திலும், தேசவழமைச் சட்டத்திலும் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட்டுள்ளது என்பதை எல்லோரும் கவனத்தில் கொள்ளவேண்டும். □

# பதினைந்து உடன்படிக்கைகளை உள்ளடக்கிய தேசிய நிகழ்ச்சி நிரலொன்று தயாரிக்கப்படும்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

பதினைந்து உடன்படிக்கைகள் அடங்கிய தேசிய நிகழ்ச்சி நிரல் ஒன்றை தயாரிப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி இந்த நிகழ்ச்சி நிரல் மக்கள் மத்தியில் கொண்டுசெல்லப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையின அரசியல் நிலைமைகளை ஒப்பிடும்போது இவ்வாறான நிகழ்ச்சி நிரல் ஒன்றை சமர்ப்பிப்பதற்கு இதுவே உசிதமான காலமாகும்.

இந்தத் தேசியக் கொள்கை தொடர்பாக மக்களின் ஆலோசனைகளும் பெறப்படவிருக்கின்றன என அவர் தெரிவித்தார்.

மாவனெல்லையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,


இலங்கையின் அரசியலுக் கப்பால் தேசியக்கொள்கைகளின் அடிப்படையில் அரசாங்கம் ஒன்று இயங்குமாயின் அது நாட்டுக்கு நீண்டகால நன்மையைக்கொண்டு வரும்.

இநதியாவின் முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பேயுடன் நான் இருமுறை இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு தொடாபில் பேச்சு நடத்தினேன். அடுத்து ஆட்சிக்கு வந்துள்ள காங்கிரஸ் கட்சியும வாஜ்பேயின் கொள்கையையே கடைப்பிடித்து வருகிறது.

1948ஆம் ஆண்டுக்குப்பின்னான காலப்பகுதியில் ஆட்சி புரிந்த டிஎஸ்.சேனநாயக்க இலங்கையை ஆசியாவில் ஜப்பானுககு அடுத்தபடியாக வளர்ச்சியடைந்த நாடாக மாற்றியிருந்தார்.

எனினும், ஐ.தே.கட்சியின் ஆட்சியைத் தோற்கடிக்க வேணடும் என்பதற்காக உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அரசாங்கம் நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழியச் செய்தது.

அதைப்போலவே ஏனைய வருடங்களிலும் ஐக்கிய தேசி



யக் கட்சியின் ஆட்சியைத் தோற்கடிக்கவந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, பொருளாதார சீரழிவுக்கு நாட்டை இட்டுச் செல்கிறது.

எது எவ்வாறாயினும், இலங்கையின ஆட்சிப் பீடத்தில் அரசியல்கட்சிகள் மாறினாலும் மாறாத தேசியக்கொள்கை ஒன்று வகுக்கப்படுமேயானால், அது நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றும்.

1956ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களச்சட்டமே இலங்கையில் இனப்பிரச்சினைக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்தது.

அந்தச் சட்டம் இலங்கையில் இனவாதத்தைத் தூண்டி விடுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தது.

இதனையடுத்து, 1976ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்ட தமிழர்களின் உரிமைகளைப் பறித்த செயற்பாடானது இலங்கையில் இனப் பிரச்சினையின் தீவிரத்தை மேலும் அதிகரித்தது எனவும் தெரிவித்தார். (ற-4)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் மதிப்பீடு செய்யப்படுகின்றன

## ஹில்டா ஜோன்ஸன் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களின் தேவை என்ன என்பதை மதிப்பீடு செய்வதில் நாங்கள் தற்போது ஈடுபட்டு வருகின்றோம்.

மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் நீண்டகால அடிபபடையில் எவ்வாறு உதவ முடியும் என்பதைப் பற்றியும் ஆராயப்பட்டு வருவதாக நோர்வேயின் சர்வதேச அபிவிருத்திக்கான அமைச்சர் ஹில்டா ஜோன்ஸன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடனான சந்திப்பின் பின் ஊடகவியலாளர்களுக்குக் கருததுத் தெரிவிக்கும்போதே அவா இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், புனர்வாழ்வுககான பணிகளில் கொடையாளி நாடுகள், சர்வதேச நாடுகள், இலங்கையரசு மற்றும விடுதலைப் புலிகள் ஆகியோருக்கிடையில் எவ்வாறு கூடடுச்செயற்பாட்டையும், ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்தமுடியும் என்பது பற்றியும நாங்கள் விடுதலைப் புலிகளுடன் விரிவாகக் கலந்துரையாடினோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-4)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மார்க்சிய குழுவினால் "மானிட அழிவுகள் முதல் அரசியல் நகர்வுகள் வரை" என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று மாலை 4.00 மணிக்கு புதிய உயர் கலைக் கல்லூரியில் நடாத்தப் படவுள்ளது.

ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் ஆர்வமுள்ளவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (க)

## கூட்டம்

(பொன்னாலை)

யாழ்.மாவட்ட உளளூராட்சி வருமான வரிப் பரிசோதகர் மேற்பார்வையாளர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று மு.ப.10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் வலிகாமம தெற்கு சுன்னாகம் பிரதேசசபை மண்டபத்தில் த.நிர்மலானந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (க-41)

## ஒளி விளக்கு ஆராதனை

(பொன்னாலை)

சுனாமியினால் உயிரிழந்தவாகளுக்கு ஆத்மசாந்தி வேண்டியும், பாதிக்கப்பட்டோரின் நலன் வேண்டியும் சுழிபுரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் ஒளிவிளக்கு ஆராதனை இடம்பெறவுள்ளது.

நாளை மறுதினம் புதன் கிழமை மாலை 6.00மணிக்கு ஆயிரத்தெட்டு ஒளி விளக்குகள் ஏற்றி ஆலயத்தில் அஞ்சலி நிகழ்வும் பிரார்த்தனையும் இடம்பெறவுளளது. (க-49)

## பற்சிகிச்சை

(மருதங்கேணி)

மருதங்கேணி கிராமிய வைததியசாலையில் பிரதி வெள்ளிக் கிழமை தோறும் பற்சிகிச்சை நடைபெறுவதற்கு சகல ஏற்பாடுகளும் செய்துள்ளதாக பிராந்திய பல்வைததிய அதிகாரி கலாநிதி மா.தவராசா தெரிவித்துள்ளார். (க-35)

# ஆஸி.ஓபன் டெனிஸ் 4 வது சுற்றுக்கு ரொடிக், லேமன் ஹுவிட் முன்னேற்றம்

மெல்போர்னில் நடைபெற்று வரும் ஆஸி.ஓபன் டென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் ஆண்டி ரொடிக் அவுஸ்திரேலியாவின லேடன் ஹுவிட் உட்பட பலர் 4வது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

அதேசமயம், தரநிலையில் 7-வது இடத்தில் இருந்த பிரிட்டன் வீரர் டிம் ஹென்மேன் அதிர்ச்சித் தோல்வியுற்றார். கடந்த சனிக்கிழமை ஆடவருக்கான 3வது சுற்று ஆட்டங்கள் நடைபெற்றன. தரநிலையில் இரண்டாவது இடத்தில் உள்ள ஆண்டி ரொடிக் 6-2,6-2 7-5என்ற செற்களில் அவுஸ்திரேலிய வீரர் ஜர்ஜன் மெல்ஜரை வென்று 4வது சுற்றுக்கு முன்னேறினார்.

இந்த ஆட்டத்தில் 22'ஏஸ்' சர்வீஸ்களைப் போட்டதுடன், 41 வெற்றிப் புள்ளிகளையும் பெறறாா ரொடிக். அத்துடன் 225 கிலோ மீற்றர் வேகம் வரை அசுர வேகத்தில் சர்வீஸ் போடடார்.

அடுதது ஜோ்மனி வீா் பிலிப் கோல்ஸ்கிறீபர் உடன் காலிறுதித் தகுதி மோதல் நிகழ்த்த உள்ளார் டிராக். மற்றொரு முக்கிய ஆட்டத்தில் தரநிலையில் 26வது இடத்தில் உள்ள ரஷ்ய வீரர் நிகோலே மேவிடென்கோவுடன் விளையாடினார் பிரிட்டன் வீரர்ஹென்மன்.


தொடக்கம் முதலே உணர்ச்சி வசபபட்டு விளையாடிய ஹென்மனை 6-4,6-2,6-2, என்ற நோ செட்களில் தோற்கடித்து சிறப்பு பெற்றார். டேவிடென்கோ இப்போட்டித் தரநிலையில் 7வது இடத்திலிருந்து ஹென்மன், கடந்த ஆணடு பிரெஞ்சு ஓபன் மற்றும் யு.எஸ் ஓபன் போட்டிகளில் அரையிறுதிச் சுற்றுவரை முன்னேறியவர். தவிர, விம்பிள்டனில் காலிறுதி ஆட்டத்தில் தோல்வியுற்றிருந்தார். வெற்றி பெற்ற மேவிடென்போ அடுத்து ஆஜென்டினா வீர் கில்ல்மே கானாஸுடன் விளையாடவுள்ளார்.

கானாஸ் 6-1,6-2,2-2 என செக் குடியரசின் ராடெக் ஸ்டெபனாக்கைத் தோற்கடித்து 4-வது சுறறுக்கு முன்னேறினார். மற்றொரு ஆட்டத்தில் பிரெஞ்சு ஓபன் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்ற கில்ல்மோ கோரியா (ஆர்ஜென்டினா) 6-4,6-3,6-5, என ஸ்பெயின் வீரர் ஜஷுவன் கார்லஸ்.'.பெரீரோவுடன் விளையாட உள்ளார்.

இவர் அடுத்து சக நாட்டின் டேவிட் நல்பாண்டியனுடன் காலிறுதி வாயப்பு மோதல் நிகழ்த்த உள்ளார். அன்றைய தினம் மாலை நடைபெற்ற ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவின் லேடன் ஹுவிட் 6-2,4-6,6-1,6-4என்ற செற்கணக்கில் ஆர்ஜென்டினா வீரர் ஜுவன் இக்னேஷியஸ் செலாவைத் தோற்கடித்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.

மகளிர் பிரிவில் பிரெஞ்ச் ஓபன சம்பியன் அனஸ்தாசியா மிஸ்கினா, அமெரிக்காவின் லினட்சே டேவன்போர்ட், வீனஸ் வில்லியம்ஸ் ஆகியோர் 3வது சுற்றில் வெற்றிபெற்று முன்னேற்றம் அடைந்துள்ளனா.

டேவன் போர்ட் 6-2,6-4என்ற கணக்கில் 15வயதாகும் செக் குடியரசு வீராங்கனை நிகோல் வைடிசோபாவையும் வீனஸ், 6-3,6-0என ஸ்ரேலின் அன்னா ஸ்மாஷ் நோவாவையும் தோற்கடிததனர். காயம் காரணமாக லிசா ரேமண்ட் முன்னதாகவே விளையாட முடியாததைக் கூறிவிட்டதால், விளையாடாமலேயே 4வது சுற்றுக்கு முன்னேறினார் தரநிலையில் 3வது இத்தில் உள்ள ரஷ்ய வீராங்கனை மிஸ்கினா. (ற)



டெனிஸில் முதல் நிலை வீரர் சுவிற்சர்லாந்தின் ரோஜர் பெடரர். தற்போது மெல்போர்னில் நடந்து வரும் அவுஸ்திரேலிய ஓபன் டெனிஸ் போட்டியில் விளையாடி வருகிறார். பயிற்சியின்போது சற்றே போரடிக்க, கிரிக்கெற் மட்டையை கையில் எடுத்து விளாசத் துவங்கி விட்டார். விளையாடுவது கிரிக்கெற் என்றாலும், அடிப்பது டெனிஸ் பந்தைத்தானே என்கிறீர்களா...

## பவுண்டரிக்கு ரூ. 31,000; சிக்சருக்கு ரூ. 1,50,000 நிதியை அள்ளி வழங்குகிறது நியூஸிலாந்து

சுனாமி நிவாரணத்திற்கான கிரிக்கெற் போட்டிக்காக நியூஸிலாந்து அரசு நிதியை தாராளமாக அள்ளி வழங்கியுள்ளது.

நியூஸிலாந்து உலக லெவன் அணிகளுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் அடிக்கப்படும் ஒவ்வொரு ஓட்டத்திற்கும் 630 ரூபாவும் ஒவ்வொரு பவுண்டரிக்கும் 31ஆயிரம் ரூபாவும் ஒவ்வொரு சிக்சருக்கும் ஒரு இலட்சத்து 50ஆயிரம் ரூபாவுமென என பரிசு அறிவித்தது நியூஸிலாந்து அரசு.

இந்தவகையில், நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில கப்டன் ஸ்டீபன் பிளெமிங மட்டுமே சுமாராக 16இலட்சம் ரூபாய் திரட்டி, நிவாரண நிதியாக வழங்கினார்.

மூனறு போட்டிகளும் முடிந்ததும், நிவாரண நிதி மொத்தமாகக் கணக்கிடப்பட்டு இலங்கை கிரிக்கெற்சபை மற்றும் வேர்ல்ட விஷன் அமைப்புகளிடம் வழங்கப்படவுள்ளது. (ற)

## போட்டியில் தோற்றாலும் கவர்ச்சியில் முன்னணியில்

செரீனா வில்லியம்ஸிடம் ஆட்டத்தில் வேண்டுமானால் தோற்றிருக்கலாம். ஆனால் கவர்ச்சியில அவரை வென்றுள்ளார் இந்திய இளம் புயல் சானியா மிர்சா.

ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவாவுக்கு அடுத்தது அதிக ரசிகர்களைக் கவர்ந்தவராகியுள்ளார் 18வயது சானியா மிரசா. பேச்சுக்காக இது சொல்லப்படவில்லை இணையத்தளத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் இது வெளியாகியுள்ளது. அவுஸ்திரேலிய ஓபன் வெப்சைட்டை இதுவரை 10 இலட்சத்து ஆயிரம்பேர் பார்த்துள்ளனர். அதில் சரபோவாவுக்க அடுத்து ரசிகர்கள் அதிகம் பார்த்துள்ளது சானியாவின் பக்கத்தைத் தான்!

செரீனா வில்லியம்ஸ் ஸ்லோவகியா வீராங்கனை டேனியலா ஹண்டுசோவா, நெதர்லாநது வீராங்கனை மிக்செல்லா கிராஜிசெக் ஆகியோர் சானியாவுக்கு அடுத்த இடத்தில் உள்ளனர்.

100 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆஸி.ஓபன் போட்டியில் மூன்றாவது சுற்றுக்கு முன



னேறியதன் மூலம் பலரது நெஞ்சங்களைக் கொள்ளைகொண்டுள்ளார் சானியா.

ஆடவர் பிரிவில் சுவிட்சர்லாந்து வீரர் ரோஜர் .'.பெடரர் முதலிடத்தைப் பிடித்துள்ளார். அவருக்கு அடுத்து அகஸ்ஸி, ஆண்டி ரொடிக லேடன ஹுவிட மராட சஃபின் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (ற)

# மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன்

47

நல்லூரில் செண்பகப்பெருமாள் காலத்துக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தலைநகர் கட்டப்பட்டு வன்மையுள்ள அரசரால் ஆட்சி செய்ப்பட்டு வந்துள்ளது. அந்நகர் அரசின் வல்லமையை அடக்கத்தான் கோட்டை அரசன் இவனை அனுப்பி இருக்கிறான். அங்ஙனமாயின் இலக்கிய சகாப்தம் என்னும் பாட்டிலே நலமிகு யாழ்ப்பாண நகரி கட்டுவித்து என்பது இவனைச் சுட்டாதோ எனின் சுட்டாது. இவன் படை எடுத்தது கி.பி.1450ல் அது பாடப்பட்டது. கி.பி.948ல் அதாவது 500 ஆண்டுகளுக்கு முன் அப்படியானால் அப்பாட்டு இவனைச் சுட்டுவதெப்படி? நன்று இவன் அத்தலைநகரை இடித்துப் போட்டுக் கட்டியதை சுட்டாதோ எனின் அப்படியும் இல்லையே. கட்டியதென்று சொல்லப்பட்ட தேயொழிய இடித்துக் கட்டியது திருத்திக் கட்டியதென்று சொல்லப்படவில்லை. அன்றியும் இது இராச விஷயம் கோட்டை அரசன் சொல்லாததை இவன் செய்யான். ஆனால் இவன இங்கே இடிக்கவில்லை என்று தான் தெரிகிறது. அஃதெங்ஙனமெனின் இவன் படை எடுத்த தலைநகருக்குச் சிங்கைநகர் என்று பெயர். அப்பெயரை அந்நல்லூர் அரசன் அந்நகர் மதிலில் எழுதி இருக்கிறான். இவன் படை எடுத்தபின் 140ஆம் வருடத்துக்குப் பிறகு போர்த்துக்கேயப் படை நல்லூருக்கு வந்திருக்கிறது. அந்தப்படை சிங்கைநகர் என்றும் எழுத்துப்பட்ட மதிலைத் தாண்டிப் போனதாக அப்படையோடுடன் வந்த பாதர் குவிறோஸ் எழுதி இருக்கிறார் ஆகையால் செண்பகப்பெருமாள் இடிக்கவில்லை. இடிக்கிற வன் முதலில் மதிலைத்தான் இடிப்பான் நிற்க,

உட்கோட்டையையும் இடிபடவில்லை என்னையெனில் இவன் படை எடுப்பில் தோல்வி கண்டோடிய கனகசூரியன் "இந்திய சிற்றரசர் பலரும் சேனைகளையும் ஆயுதங்களையும் கொடுத்துவிட அவன் சகல ஆயுதங்களுடனேயும் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்து மேற்கு வாசல வழியாக நுழைந்தான்" (யா.வை.மா.பக்.67) என்பதால் கனகசூரியன் முன்னர் இருந்த கோட்டை அப்படியே இருந்திருக்கு அதை அறிந்துதான் கனகசூரிமான் அவ்வழியாகக் காத்திராத வேளையில் நுழைந்திருக்கிறான். முன் செண்பகப்பெருமாள் இடித்துக் கட்டினால் அக் கனகசூரியனுக்கு வாசல் தெரியாது நிற்க. கோட்டையும் நல்லூரும் இயற்கையில் வெவ்வேறு தேசங்கள். அங்கில்லாத பொருள் இங்கே கிடைக்கும். ஆகையால் அப் பெருமாள் இடியான். அப் பெருமாளுக்கு அரசன் ஓடினது வலு வாய்ப்பு. அப்படியே இருந்து ஆட்சியைச் சுலபமாக கைப்பற்றி ஆட்சி செய்தான் என்றறிக. இடித்தால் ஆட்சி செய்ய இயலாதே நிற்க.

செண்பகப்பெருமாள் நல்லூர்த் தலைநகர் கட்டினதற்கோ கந்தசுவாமி கோயிலைக் கட்டியதற்கோ பிறர் ஒருவரும் ஒரு ஆதாரமும் காட்டவில்லை. அவர்கள் கைலாயமாலையில் வரும் அமைச்சர் புவனேகவாகுவைச் சுட்டி 948ஆம் ஆண்டு வரையில் பாடப்பட்ட பாடலில் புவனேகவாகு பெயர் வர அதிலே நலமிகு யாழ்ப்பாண நகரி கட்டுவித்து நல்லைக்குலவிய கந்தவேட்கு கோயிலும் புரிவித்தானே என்றது செண்பகப்பெருமாளை பாடினதாக காட்டு கிறார்கள். செண்பகப்பெருமாள் ஐந்நூறு ஆண்டுவரை பின்னுள்ளவன் அன்றியும் அப்பாடல் ஆசிரியர் முத்து இராசக்கவிராமர்க்கும் செண்பகப்பெருமாளுக்கும் இவ்வாறு பாடும் தொடர்பு கொள்ளச் சந்தர்ப்பம் வராதே. இது வைபவமாலை நூலுக்கு எதிராகப் படைத்த படைப்புகளுட் சிலவாகும். அன்றியும் கைலாயமாலை செண்பகப்பெருமாளுக்குப் பின்னுள்ள தமிழரசன் காலத்திலே பாராட்டப்பட்டிருக்காது ஏனென்றால் சோழர் உறையூர்த் தலைநகரம் அப்பொழுது இல்லை அது அழிந்துவிட்டது. இங்கே பாயிரகாரர் உறையூர் முத்துராசக் கவியரசர் பாடியதென்று சொல்லி இருப்பதனால் என்க. அன்றியும் கைலாயமாலையிற் சொல்லப்பட்ட குடியேற்றம் பற்றி மேற்படி புலவர்க்குப் பாடும்படி குறிப்புகளைக் கொடுக்க இவர்கள் அறியார். அது பல நூற்றாண்டுகளுக்கு முற்பட நிகழ்ந்த சம்பவம் அன்றியும் அக்கோயில் கட்டிய காலத்திலேயன்றிப் பின்னவர் காலத்திலே அப்படி ஒரு சந்தர்ப்பம் வரவில்லை. அன்றியும் மாருதப்பிரவல்லி கதை சிங்கையாரியனுக்கும் யாழ்ப்பாண வரலாறு பாண்டியமழவனுக்கும் தான் தெரியும் பின்னுள்ளவர்க்குத் தெரியாதே.

## 39. நல்லூர்த் தலைநகர் இருந்த களம்

யாம் இத் தலைநகர் களம் இருந்த இடம் விசாரணையில் ஈடுபட்டு அவ்விடம் சென்று ஆராய்ந்து பார்த்த காலை, யமுனா ஏரி சங்கிலித்தோப்பு சேர்ந்து இருக்கும் அக்களத்துக்கு அரைமைல் வரை கிழக்கே நாயன்மார்கட்டு என்னும் பிரதேசத்தில் கொழும்புத்துறைக்கும் நல்லூர்க்கும் இடையில் பன்னூற்றுக் கணக்கானோர் வீடுகட்டி குடிகொண்டு வாழும் ஒரு பிரதேசம் "கோட்டை வாசல" என்னும் தோப்புப் பெயர் உள்ளதாய் இருப்பதைக் கண்டேன். அங்குள்ள பற்பல வீடுகளுள்ளும் நாம் பார்க்க வேண்டிய தானங்களில் உள்ள வீடுகளுக்குப் போய் அவற்றின் சொந்தக்காரரைக் கண்ட யான் நல்லூர்த் தமிழ் அரசர்காலச் சரித்திரம் எழுத முயற்சிக்கிறேன். அதற்காக உங்கள் வீட்டுறுதியின் தோப்புப் பெயரைப் பார்த்தறிய விரும்புகிறேன். அவ்வுறுதிகளைத் தாருங்கள் என்று கேட்டேன். அவர்கள் அப்பெயர்கள் "கோட்டை வாசல்" மன்று அழைக்கப்படுகின்றன என்று சொல்லி அவைகளை என்னிடம் தந்தார்கள். நானும் வாசித்துப் பார்த்துக் கோட்டை வாசல் என் றிருக்க கண்டேன். மகிழ்ந்தேன். எனவே தமிழ் அரசரின் கோட்டையின் வாசல் கிழக்கு நோக்கிய தென்றும் தேர்ந்தேன். எனவே பிற ஆராய்ச்சிக்காரர் நல்லூர் நகர்க்குத்தான் சிங்கைநகர் என்றும் இன்னொரு பெயர் இருப்பதைத் தேர்ந்து கொள்ளாமல் அச்சாதனத்தால் அது இன்னொரு இடத்தில் உள்ள நகரமென்று விளங்கிக் கொண்டு அவ்விளக்கத்தால் வல்லி புரத்துச் செங்கடக நகர் மேலே சிங்கைநகரை நிச்சயம் பண்ணி உண்மையைச் சரிதத்தை மாறுபட எழுதியிட்டனர் என்க.

இக்களம் வடக்கே சட்டநாதர் கோயிலுக்கும் தெற்கே கைலாய பிள்ளையார் கோயிலுக்கும் மேற்கே வீரகாளியம்மன் கோயிலுக்கும் இடைப்பட்டதாக முத்திரைச் சந்தையை உள்ளடக்கியதாகச் சங்கிலியன் தோப்பு யமுனா ஏரிகளையும் சேர்ந்து கிழக்கு வாசல் கொண்டதாக கி.பி.948 தொடங்கி கி.பி.1658 வரை அரசு இருந்ததென்க. இவ்வொரு களத்தில் உள்ள கோட்டையில்தான் சிங்கையாரியர் முழுப்பேரும் ஆட்சி செய்தார்கள். நல்லூர்க் கந்தசுவாமி கோயில் இக்களத்திதின் மத்தியைச் சேர்ந்ததாக மேற்கேயிருக்கிறது எனலாம்.

இந்நகர்க்குப் போர்த்தர் வரும்போது சிங்கைநகர் என்னும் பெயர் அழைக்கப்பட்டிருக்கு. இராசாதோட்டம், ஆரியகுளம் புறநகர்ப் பக்கமாயமைந்தவர்களாம். இச்சிங்கையாரிய பரம்பரையில் சங்கிலி கடைசிக் காலத்தில் இருந்த பிரசித்தி பெற்ற மன்னன். அவன் இருந்த நிலம் சங்கிலித்தோப்பென்று பெயர் பெற்றது. அந்நிலத்திலே அக்களத்திலேதான் முன்னர் கனகசூரியனின் கோட்டை அரண்மனை என்பன இருந்துள்ளன. அதுதான் கனகசூரியன் செண்பகப் பெருமாளிடம் தோற்ற இடமும் பின்னர் அவனிடம் அவன் பிரதிநிதியிடமோ வென்ற இடமும் கனகசூரியனுக்கு முன்னர் எக்காலத்திலும் தலைநகரில் படைஎடுப்பு நடக்கவுமில்லை தலைநகர் இருந்த களம் மாற்றம் அடையவும் இல்லை.

(தொடரும்)

# எரிபொருட்களின் விலை குறையும்?

(கொழும்பு)

டொலரின் பெறுமதி குறைந் துள்ளதால் எதிர்வரும் வாரத்தில் தேசிய சந்தையில் எரி பொருட்களின் விலை ஓரளவு குறையலாம் என்று எரிபொருள் மின்சக்தி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிப்ப தாவது, உலக சந்தையில் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 42டொலருக்கும் அதிகமாக குறைந்துள்ளது. எனவே மசகு எண்ணெயின் விலை சரிந்துள்ள இந் நிலையில் இதன் சலுகையை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க அரசு எதிர்பார்க் கிறது என்று தெரிவித்தார்.

இதற்கமைய விரைவில் பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருட்களின் விலை குறையலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (க-9)

# விளையாட்டு விழா பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் நடைபெறவிருந்த தமிழீழ தேசிய விளையாட்டு விழா ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 26ஆம் திகதி இடம்பெற்ற கடல்கோள் அனர்த் தத்தின் விளைவாக வடக்கு-கிழக்கில் ஏற்பட்ட துயரச் சம்பவத்தையடுத்தே எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெற இருந்த நான்காவது தமிழீழ தேசிய விளையாட்டு விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது எதிர்வரும் ஜூலை மாதம் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்தார். (ற-5)

# குடிவரவு குடியகல்வு சட்டமூலத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன

(கொழும்பு)

குடிவரவு குடியகல்வுச் சட்டமூலத்தில் திருத்தங்கள் கொண்டு வருவது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. விமானங்கள் மற்றும் கப்பல்கள் மூலம் சட்டவிரோதமாகப் பலர் வெளிநாடுகளுக்குச் செல்வதால் இதனைத் தடுக்கும் வகையிலேயே இத் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது.

இதன்படி தற்போது அமுலில் உள்ள குடிவரவு குடிகல்வுச் சட்டத்திற்குப் பதிலாக விசேட சரத்துக்கள் உள்ளடக்கப்பட்ட சட்ட மூலமொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் இந்தச் சட்டமூலம் அடுத்த வாரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் எனவும் நீதியமைச்சர் ஜோன் சேன விரத்தின தெரிவித்தார்.சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமையவே இப்புதிய சட்டமூலம் உருவாக்கப்பட்டது.

சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குச் செல்வோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இந்தச் சட்டமூலம் அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் நீதியமைச்சர் மேலும் தெரிவித்தார். (ற-9)




மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் மக்கள் வங்கியின் மாணவர்களுக்கான சிசு உதான கணக்கு ஆரம்பிக்கப்பட்ட வைபவத்தன போது, சாவகச்சேரி மக்கள் வங்கியின் முகாமையாளர் எஸ்.சிவபாலன் உரையாற்றுவதையும், மேடையில் மக்கள் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் எம்.கே.சிவபாதவிருதயர், வித்தியாலய அதிபர் கே. சிவானந்தன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்:யாழ்ப்பாண நிருபர்)



"சைவன்" காலாண்டு சஞ்சிகை வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரையை வைத்திய கலாநிதி சீ.கதிரவேற்பிள்ளை நிகழ்த்துவதையும் விழாவில் கலந்துகொண்ட பாடசாலை அதிபர் செ.சேதுராஜா, பாலர் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் து.சத்தியசீலன், நூலாசிரியர், மன்றத்தின் உதவி நிதிச் செயலாளர் ஆ.தனராஜா, பிரதேச செயலர் சத்தியசீலன், தொழிலதிபர் கி.அமலதாஸ், வணிக சங்கத்தலைவர் மு.சுந்தரலிங்கம், நெல்லை முருகமூர்த்தி பிரதமகுரு கௌரிபாலக் குருக்கள் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

(படம்: எஸ்.இராமச்சந்திரன்)

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும் - குறள்

வலம்புரி

## சொல்லிலும் செயலிலும் வேறுபட்டுவிட்ட பீரிஸ்

அரசியல்வாதிகள் நல்ல பெயரைப் பெற்றுவிடுவது சாதாரணமான விடயமன்று. அரசியல்வாதிகள் என்றால் அவர்கள் ஏமாற்றுக்காரர்கள், அவரகளை நம்பவேமுடியாது என்ற கருத்துக்கள் பரவலாக நிலவி வருகின்றது.

"அரசியல் சாக்கடை" என்ற பொதுவான வாசகம் புழக்கத்தில் இருந்தாலும், அரசியல் என்பது சாக்கடையன்று. அது ஓர் அறப்பணி என்ற உண்மையை எவரும் மறுத்துவிடலாகாது.

தூய்மையான எந்த இடத்திலும் அழுக்கான பொருட்கள் இருப்பின் அது தூய்மையைப் பழுதாக்கிவிடும் என்பது பட்டறிவில் கண்ட உண்மை. அந்த உண்மைக்கு அரசியல் மட்டும் விதிவிலக்கன்று. நேர்மையற்றவர்கள் அரசியலுக்குள் நுழைந்துவிடுவதால் அரசியல் சாக்கடையாகின்றது என்பதே உண்மை.

நேர்மையான அரசியல்வாதிகள் உலக மக்களின் மனங்களில் நிறைந்துள்ளனர் என்ற உண்மை, அரசியல் சாக்கடையல்ல என்பதற்கு ஓர் முக்கிய எடுத்துக்காட்டாகும்.

அவ்வகையில் இலங்கையின் தென்னிலங்கை அரசியல் பரப்பிலும் ஏற்றுக்கொள்ளத்தக்க அரசியல்வாதிகள் இருந்துள்ளார்கள், இருக்கின்றார்கள் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

இதனடிப்படையில் நேர்மையான ஓர் அரசியல்வாதியாக இனங்காணப்பட்டவர்களில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும் ஒருவர். இருந்தும் அவரின் நேர்மை சீர்குலைக்கின்ற சம்பவங்கள் அவர் சார்ந்த கட்சிகளினால் ஏற்பட்டதுண்டு.

அவரிடம் இடையிடையே ஏற்படக்கூடிய இனவாதத் தன்மைகள் இனப்பிரச்சினைக்கான தீரவுத் திட்டம் தயாரிக்கப்பட்ட வேளையில், சில சலனங்களை, விமர்சனங்களை ஏற்படுத்தியதுவும் உண்டு.

எதுவாயினும் மனிதர்கள் தவறுவிடக் கூடியவர்களே என்ற யதார்த்தத்தின் நோக்கில் பேராசிரியர் பீரிஸிடம் இருக்கக்கூடிய நல்ல சிந்தனைகளை ஏற்றுக்கொண்டால் ஓர் நேர்மையான அரசியல்வாதி என்ற பதத்தை அவருக்குச் சூட்டமுடியும்.

நேர்மை என்பது காலத்துக்குக் காலம் மாறுபடக்கூடியதா? அதனை அளவிடக்கூடிய கருவி ஏதேனும் உண்டா? என்ற கேள்விகள் மக்களிடையே ஏற்படுவதும் நியாயமானதே. அந்த நியாயத்துக்குள் பேராசிரியர் பீரிஸும் உட்பட்டு விடுவதே இங்கு நோக்குதற்குரியதாகும்.

ஆம், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சியமைப்பில் சபாநாயகர் தெரிவில், தமது தரப்பு உறுப்பினரை சபாநாயகராகத் தெரிவுசெய்வதில் தமிழ்க்கூட்டமைப்பின் ஆதரவைப் பெறுவதில் முனைப்புடன் செயலாற்றிய பீரிஸ்,

உப சபாநாயகர் தெரிவில் தமிழ்க் கூட்டமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரை முன்மொழியாது, ஆளும் தரப்பு உறுப்பினரை உப சபாநாயகராகத் தெரிவுசெய்து ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். இங்குதான் அவரிடம் இருக்கக்கூடிய இனவாத சிந்தனை வெளிப்படுகின்றது.

இது ஒருபுறமிருக்க, ஜனாபதி சந்திரிகா மீது அடிக்கடி குறைகூறிக்கொள்ளும் பீரிஸ், ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தயாரித்த வரவு செலவுத் திட்டத்தில் அதிகரித்த பாதுகாப்புச் செலவீனத்திற்கு ஆதரவை வழங்கினார்.

இப்போது அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு தேர்தல் என்ற பேச்சுக்கே இடமில்லையென ஜனாதிபதி கூறியிருப்பதை சர்வாதிகாரத்தின் உச்சமென பீரிஸ் வர்ணித்திருந்தாலும், அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வராதது ஏன் என்பதே தற்போதைய வினாவாகும்.

### இலங்கையின் மீள்கட்டுமானம்; சமாதானப் பேச்சு குறித்து ஆராய

# அமெ. பிரதி இராஜாங்கச் செயலாளர் இவ்வாரம் பிரஸ்லஸ் பயணமாகவுள்ளார்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்திற்கு முன்னர் தடைப்பட்டுப் போன சமாதான முயற்சி பற்றியும் அதன் தற்போதைய நகர்வுகள் குறித்தும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்வதற்காக அமெரிக்கப் பிரதி இராஜாங்கச் செயலாளர் றிச்சர்ட் ஆர்மிடேஜ் இவ் வாரமளவில் பிரஸ்லஸ் செல்லவுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் றிச்சர்ட் பௌச்சர் தெரிவித்துள்ளார்.

அங்கு செல்லும் ஆர்மிடேஜ் ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளுடனும் டோக்கியோ மாநாட்டில் இலங்கையின் அபிவிருத்திக்கு உறுதியளித்த நாடுகளின பிரதிநிதிகளுடனும் இலங்கையின் மீள்கட்டுமானப் பணிகளுக்கு உதவி வழங்குவது குறித்து விசேட பேச்சுவார்த்தையை நடாத்தவுள்ளார்.

இலஙகையில் இரு தசாபத காலத்திற்கும் மேலாக நடந்த கொடிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில மனிதாபிமான உதவிகள் வழங்குதல் உட்பட அதன் மீள்கட்டுமானப் பணிகள், அதற்கான உதவிகள் என்பன குறித்தும் அச் சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும இடையில் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிபபது தொடர்பாக இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளும அதிகாரிகள் தமது முழுமையான ஆதரவினைத் தெரிவிப்பார்கள்.

இதேவேளை, சுனாமி கடற்கொந்தளிப்பினால் சுமார் 40 ஆயிரம் மக்கள் உயிரிழந்துள்ள நிலையில் பாதிக்கப்பட்ட கடற்கரையோர பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தை எவ்வாறு முன்னேற்றுவது என்றும் அதற்கு உதவிகளை வழங்குவது தொடர்பாகவும் கலந்துரையாடப்படும் எனவும் றிச்சர்ட் பௌச்சர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# ஆளுநங் கட்சியுடன் இணையுமாறு ஐ.தே.க.எம்.பிக்களுக்கு நெருக்குதல்

(கொழும்பு)

உயர் பதவிகளைப் பெற்று ஆளுங்கட்சியுடன் இணையுமாறு பிரதி அமைச்சர் உள்ளடங்கிய குழுவொன்று தமக்கு நெருக்குதல் கொடுப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கட்சியின் பாராளுமனற உறுப்பினர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

கூட்டமைப்பு அரசின் பிரபல பிரதி அமைச்சர் ஒருவரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உள்ளடங்கிய குழுவொன்றுமே இவ்வாறு நெருக்குதல் கொடுப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுனாமி தாக்கத்தின் பின்னர் ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் கோபி அனான், அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொலின் பவல் உட்பட உலக நாடுகள் பலவற்றின் பிரமுகர்கள் மற்றும் தலைவர்கள் இலங்கைக்கு வந்து சென்ற பின்னரே இவர்கள் இவ்வாறான நெருக்குதல் கொடுப்பதாகக் கூறப்படுகின்றது.

அத்துடன், ஆளுங்கட்சியுடன் இணைந்து கொள்ளும் எந்தவொரு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினருககும் உடனடியாக அமைச்சர் பதவி பெற்றுக்கொடுக்கும் என இக் குழுவினர் உறுதியளிக்கின்றனராம்.

அரசு இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்குக் கொடுத்துவரும் அழுத்தங்கள் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு வழங்கி வரும் ஆதரவைத் தொடாந்தும் வழங்குவது குறித்து மீள் பரிசீலனை செய்ய வேணடி ஏற்படும் என ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார். (க-9)

# சுனாமியை நினைவு கூரும் வகையில் பாராளுமன்ற வளவில் நிகழ்வுகள்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஒரு மாதத்தை நினைவு கூருகின்ற வகையில் நாளை மறுதினம் புதன்கிழமை பாராளுமன்ற "நுகசெவன" வளவில் பல்வேறு நிகழ்வுகளை நடத்துவதற்கு சௌமிய இளைஞர் நிதியம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்நிகழ்வில் சுனாமி அனர்த்த ஞாபகார்த்த சின்னத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

அத்துடன், சுனாமி அனர்த்தத்தினால் பலியானவர்களின் ஆத்ம சாந்திக்காக சர்வமத பிரார்த்தனை, மீளக் கட்டியெழுப்பப்படும் வேலைத்திட்டங்களில் எவ்விதமான பாதிப்புகளும ஏற்படாத வகையில் அனைவரையும் ஒரே மேடையில் அமர்த்தி உறுதிமொழி எடுத்துக் கொள்ளல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறும்.

இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஏனைய கட்சித் தலைவர்கள் உட்பட அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக சௌமிய இளைஞர் நிதியம் அறிவித்துள்ளது.

செடெக், சர்வமத சமாதான நிதியம், போருக்கெதிரான பேரணி, பவ்ரல் போன்ற அமைப்புகளுடன் இணைந்தே இந்த நிகழ்வை முன்னெடுக்கவுள்ளதாக சௌமிய இளைஞர் நிதியத்தின் தலைவர் எஸ்.பி.அந்தோனிமுத்து தெரிவித்தார்.

வருடா வருட[illegible] டிசெம்பர் 26ஆம் திகதி குறித்த இடத்தில் ஞாபகார்த்த நி[illegible] நடத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சௌமிய இளைஞர் நிதியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்[illegible]ள்ளது. (க-9)

# இரத்தினபுரி வங்கிகளில் தமிழ்பேசும் ஊழியர்கள் இன்றி தமிழர்கள் சிரமம்

(கொழும்பு)

இரத்தினபுரி நகரில் உள்ள அனைத்து அரச மற்றும தனியார் வங்கிகளில் தழிழ் பேசும் ஊழியர்கள் நியமிககபபடாத காரணத்தினால் தமிழ்பேசும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இரத்தினபுரி நகரில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, கிராமிய வங்கி, சப்ரகமுவ அபிவிருத்தி வங்கி, சம்பத்வங்கி, ஹற்றன் நஷனல் வங்கி, கொமர்ஷியல் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, செலான் வங்கி,பான் ஏசியா வங்கி, டி.எப்.சி. வங்கி உட்பட பல வங்கிகள் இயங்கி வருகின்றன.

எனினும் இவ் வங்கிகளில் போதிய தமிழ் பேசும் ஊழியாகள் நியமிக்கப்படவில்லை.

அத்துடன், அங்கு அன்றாட நடவடிக்கைகளும் தனிச் சிங்கள மொழியிலேயே இடம்பெறுகின்றன. இதனால் இவ வங்கிகளை நாடிவரும் தமிழ் மக்கள் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கும் பல்வேறு கொடுப்பனவுகள அதாவது ஊழியர் சேமலாப நிதி, சகாயப் பணம், நம்பிக்கையப் பணம் என்பன காசோலையாகவே வழங்கப்படுகிறது. இதனை மேற்படி வங்கிகளில் வைப்பு செய்வதில் இவர்கள பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க இவ் வங்கிகளில் கடமை புரிந்து ஓய்வு பெறும் தமிழ் பேசும் அதிகாரிகளுக்குப் பதிலாக பெரும்பான்மையினத்தவர்களே நியமிக்கப்படுகின்றனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

## திசைரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

ஓர் அரசன் இருந்தான். அவன் மரணம் நெருங்கியதும் 'என் பேழைகள் அனைத்தையும் என் முன் கொண்டு வாருங்கள்' என்று சொன்னான். 'அந்தப் பெரிய வைரத்தை எடுங்கள்' என்றான். அதைத் தன் மார்பில் வைத்துக் கொண்டு அழுதான். நாயைப் போல் அழுது கொண்டே இறந்தான்.

சுவாமி விவேகானந்தர்



நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு வருகைதந்த நோர்வே உயர்மட்டக் குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையை சந்திப்பதை முதலிரு படங்களிலும், நோர்வேக் குழுவினர் முல்லைத்தீவுக்குச் சென்று அப்பகுதி நிலைமையை பார்வையிடுவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் சடலங்கள் தோண்டப்படுகின்றன

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பலியான வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் புதைகுழிகளைத் தோண்டி சடலங்களை இனங்காணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காலி, உனவட்டுன ஆகிய பகுதிகளில் கடந்த வியாழக் கிழமை முதல் இந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சடலங்களைத் தோண்டியெடுக்கும் பகுதிகளுக்குப் பலத்த காவல் போடப்பட்டிருப்பதுடன், சர்வதேசப் பொலிஸாரின் கண்காணிப்பும் இடம்பெற்றுவருகிறது.

பொதுமக்கள் உட்படப் பத்திரிகையாளர்களும் அப்பகுதிக்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

இதேநேரம் காலி, கராப்பிட்டிய ஆஸ்பத்திரி சட்டவைத்திய அதிகாரியின் காரியாலயத்திற்கு விசேட பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.

புதைகுழி தோண்டப்பட்டு எடுக்கப்படும் உல்லாசப் பிரயாணிகளின் சடலம் அங்கு கொண்டு செல்லப்பட்டு இனங்காணப்பட்ட பின்னர் மரண விசாரணைகள் நடத்தப்பட்டு விசாரணை அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

ஜேர்மன், சுவீடன், அவுஸ்ரேலியப் பிரமுகர்கள் இந்தப் புதைகுழி தோண்டும்போது பிரசன்னமாயிருந்தனர். வியாழக் கிழமை பத்து புதைகுழிகள் தோண்டப்பட்டு அவற்றில் மூன்று குழிகளிலிருந்து மூன்று சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டபோதிலும், இரண்டு வெளிநாட்டுப்பெண்களின் சடலங்களே இனங் காணப்பட்டன. (ற)

# நோர்வே வெ.அமைச்சர் கதிர்காமருடன் பேச்சு

(கொழும்பு)

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான்பீற்றர்சனுக்கும், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் இடையில் நேற்று சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது தனது இலங்கை விஜயத்தின் நோக்கம் குறித்து ஜான் பீற்றர்சன் கதிர்காமருக்கு எடுத்துக் கூறினார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அம்பாந்தோட்டை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான விஜயம் குறித்தும், தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரனுடனான சந்திப்புக் குறித்தும் பீற்றர்சன் விளக்கினார்.

விடுதலைப்புலிகளினாலும் அரசினாலும் மேற்கொள்ளப்பட்ட சுனாமி நிவாரணம் குறித்து பீற்றர்சன் பாராட்டுத் தெரிவித்தார்.

இதேவேளை பீற்றர்சன் நேற்றுக்காலை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடினார். (ச)

# ஜன.26 தமிழீழ தேசிய...

அழிவுகளையும், இழப்புக்களையும் சந்தித்து பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள். இந்த இயற்கையின் கோரத்தாண்டவத்தால் இடம்பெயர்ந்த எமது மக்கள் தமது உறவுகளையும் வாழ்விடங்களையும் இழந்து பிரிந்த சோகத்துடன் மனம்பேதலித்த நிலையில் மீண்டும் நலன்புரி நிலையங்களிலும், உறவினர் நண்பர்கள் வீடுகளிலும் இருந்துவருகிறார்கள்.

இப் பேரனர்த்தம் காரணமாக தமிழர் தாயகத்திலும் ஏனைய தெற்காசிய நாடுகளிலும் உயிரிழந்தவர்களை நினைவுகூரும்முகமாக நாளை மறுதினம் புதன் கிழமை அன்று தேசிய துக்கதினமாக தமிழீழ விடுதலைப் புலிகளால் பிரகடனப்படுத்தப்படுகிறது.

இந்நாளில் தமது அன்புக்குரியவர்களையும், உறவுகளையும் இழந்து துடிக்கும் எமது உறவுகளின் சோகத்தில் பங்குகொள்வோம். மூர்க்கமாக எழுந்த கடல் அலைகளில் சிக்கி எமது உறவுகள் உயிர்நீத்த அத்தினத்தில் தமிழர் தேசத்திலும், புலம்பெயர்ந்து தமிழர் வாழும் அனைத்து நாடுகளிலும் நினைவுச் சுடரேற்றி இறந்துபோன உறவுகளை நினைவுகளில் நிறுத்துவோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தைச்
சேர்ந்த திரு.கா.சிவபாலன் மற்றும் சிவஞானசுந்தரம்
ஆகியோரின் அருமைத் தந்தையார் மட்டுவில்

கந்தர் காசிநாதர் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலம்புரி
நிர்வாகம்

# ரி.சி.ரி. விற்பனை நிலையம் திறப்பு

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ரி.சி.ரி. பல்பொருள் விற்பனை நிலையம் 527 நாவலர்வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இன்று காலை 10 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் ஆலயத்தின் சமாதான ஆலோசகர் மாட்டின் ஸ்துவர் சிங்கர் நிலையத்தை திறந்து வைப்பார். (த)

# நயினையில் தைப்பூசம்

தைப்பூச தினத்தை முன்னிட்டு நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் விசேடபூசைகள் இடம்பெறவுள்ளன.

நாளை காலை பத்து மணிக்கு விசேட அபிஷேகங்கள் நடைபெற்று அம்பாள் மஞ்சத்தில் வெளிவீதி உலாவருவார்.

இதேவேளை தைப்பூசத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ச)

## நோர்வேக்குழு...

இலங்கைவந்த நோர்வேக் குழுவினர் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளை விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் நேற்று நாடு திரும்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## நோர்வே...

இதேவேளை அரசினால் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டம் குறித்த தமதுஎதிர்ப்பை கூட்டமைப்பினர் நோர்வேக் குழுவினரிடம் தெரிவித்தனர்.

கூட்டமைப்பின் சார்பில் ஜோசப பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பத்மினி சிதம்பரநாதன், செல்வம் அடைக்கலநாதன், ஈழவேந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச)

## சுனாமி ...

சைக் கோரியுள்ளார்.

இதேவேளை டிசம்பர் 22 ஆம் திகதி 358 கோடி 50 லட்சம் ரூபா செலவில் கடற்படைக்கு கப்பல்களைக் கொள்வனவு செய்யும் ஒப்பந்தமொன்று கடற்படைத் தளபதியால் இலங்கை கப்பல் கம்பனி ஒன்றுடன் கைச்சாத்திடப்பட்டிருக்கிறது. 300 கோடி ரூபா செலவில் 10 அதிவேக விசைப் படகுகளும், 58 கோடி 50 இலட்சம் ரூபா செலவில் துருப்புக்களை ஏற்றியிறக்கக்கூடிய கப்பலும் வாங்குவதற்காகவுமே இவ் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

THE ROYAL COLLEGE OF JAFFNA

காலை நேர பாலர் வகுப்பு
ஆரம்பமாகியுள்ளது
(ஆங்கிலம் மட்டும் ஆங்கில மூலம்) மாதாந்தக்கட்டணம் 100/= சிறந்த பாடசாலைகளில் அனுமதிபெற. தொடர்பு தலைமை ஆசிரியர் விக்னேஸ்வரன் ஆச்சாரி
426 (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம், (9244)

# தொழில் இழந்தோரின் விபரம் திரட்டப் பணிப்பு

(கொழும்பு)

சுனாமி பேரலைகளின் காரணமாக தொழில்களை இழந்தோர் தொடர்பான தகவல்களை தொழில அமைச்சு திரட்டிவருகிறது.

சுனாமியால் சுயதொழில்களை இழந்தோர் மற்றும் தமது தொழிலை இழந்தோரின் விபரங்கள் திரட்டப்படுவதாக தொழில் அமைச்சர் அத்தாவுட செனிவிரத்தின தெரிவித்தார்.

மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேசசெயலகங்கள் ஊடாக இந்தத் தகவல்கள் திரட்டப்படுகின்றன.

தொழிலை இழந்தவர்களுக்கு நிலையான தொழில் கிடைக்கும வரை அவர்கள் வருமானம் பெறகூடிய தொழில்முறை ஒன்றை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சகல மாவட்டங்களிலும் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எதிர்காலத்தில் கிடைக்கும் வெளிநாட்டுத் தொழிவாய்ப்புக்களின் போது இவர்களுக்கு முன்னுரிமை வழங்கவும் அமைச்சு எண்ணியுள்ளது.

இது ஒரு நீண்டகால செயற்திட்டமாகும். இதன் முதல்கட்டமாக பெயர்ப்பதிவுகள் இடம்பெறும் எனவும் அவர் தெரிவித்தார். (த-9)

## ஸ்ரீ.சு.க.-ஜே.வி.பி...

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஒப்பந்தத்தைமீறி நடந்துவருவது குறித்தும், அதன் எதிர்கால வியூகங்கள் குறித்தும் ஜே.வி.பியின் அரசியல் உயர்பீடம் நேற்றுக் கூடிஆராய்ந்தது.

இதில் சமாதான முயற்சி உட்பட அனைத்து விவகாரங்களிலும் சுதந்திரக் கட்சி எதேச்சதிகாரமாகவும் ஒப்பந்தத்தை முற்றுமுழுதாக மீறியும் செயற்பட்டு வருவது குறித்து அரசியல் உயர்பீடம் தீவிரமாக ஆராய்ந்ததுடன் எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பியுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை பல தடைவைகள் மீறி நடந்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சமாதான முயற்சியில் நோர்வே நாட்டின் பங்களிப்புக் குறித்து எம்முடன் எதுவும் கலந்துரையாடப்படவில்லை.

ஜனாதிபதி இது விடயத்தில் தன்னிச்சைப்படி நடந்துகொள்கிறார். சமாதான முயற்சி மற்றும் அரசின் அமைச்சுக்கள் பற்றிய விபரங்களில் இருதரப்பினரதும் ஒத்துழைப்புடன் விடயங்களைக் கலந்துரையாடி தீர்மானிப்பது என ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

ஆனால் இவற்றுக்கு மாறாகவே எல்லாம் நடக்கிறது. அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு விடயத்திலும் எமது ஆலோசனை பெறப்படவில்லை.

ஒப்பந்தத்திற்கு மாறாகச் செயற்பட்ட விவகாரங்களில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி எமக்குப் பூரண விளக்கத்தை அளிக்க வேண்டும்.

இவ்வாறில்லாமல் இந்த நிலைமை தொடருமாயின் சுதந்திரக் கட்சியுடனான தொடர்புகளை முற்றாக நிறுத்துவதற்கான முடிவுகளை ஜே.வி.பி எடுக்க நேரிடும். அதுவரை கட்சியுடனான எந்தவித தொடர்புகளையோ பேச்சுவார்த்தைகளையோ வைத்துக் கொள்ள ஜே.வி.பி தயாராக இல்லை எனவும் ஜே.வி.பியின் உயர்மட்டக் கூட்டத்தில் நேற்றுத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை ஜே.வி.பியினரின் அரச ஊடகங்களினுடாக பிரசாரங்களையும், அவர்களது செய்திகளையும் ஒலி, ஒளிபரப்பவேண்டாமெனவும் அவை தொடர்பில் தீவிர கண்காணிப்பை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி கடந்த வாரம் உத்தரவிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ச)

மனோகரா திரையரங்கு
யாழ்ப்பாணம்
இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
விஜய், த்ரிஷா மற்றும் பலர் நடித்த
இசை தினா
திருப்பாச்சி
இயக்கம் பேரரசு



கா.நே- 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ராஜா
யாழ்ப்பாணம்
சரத்குமார், நயன்தரா வடிவேல் நடித்த
இசை பரத்வாஜ்
இயக்கம் ஹரி
ஐயா



கா.நேரம் 10.30,2.30,6.30,9.30 (பு.நே)

நாதன்ஸ்
(யாழ்ப்பாணம்)
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு (குளிரூட்டப்பட்டது)
பிரசாந், சினேகா, வடிவேல், ஜனகராஜ் இன்னும் பலர் நடித்த
ஆயுதம்



2 வது வசூல் வெற்றி வாரம்
பு.நேரம் 10.30,2.30,6.30,9.30

நிறைஞ்சனாஸ்
சங்கானை
இன்று காட்சிகள் இல்லை
நாளைமுதல்
மம்முட்டி நந்திதாதாஸ் நடித்த
விஸ்வ துளசி

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.